Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்

உயர்தரத்துடனும்

குறைந்த செலவுடனும்

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628

Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,

பஸ்ரியன் சந்தி,

யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை (05.01.2014) பக்கங்கள் 20 ஓசை – 096

03



சீசன்

08



அசையாத மங்கை

## மன்னார் மனிதப் புதைகுழியில் நேற்றும் எலும்புக்கூடுகள் மீட்பு

### சிறுவர்களின் பற்களும் கண்டெடுப்பு

(மன்னார்)

மன்னாரில் தோண்டப்படும் மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றைய தினமும் 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதுடன், சிறுவர்களின் பற்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியிலிருந்து கடந்த 20 ஆம் திகதியில் இருந்து நேற்று வரைக்கும் மனித எலும்புக் கூடுகள் 18 மற்றும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைய அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர்

19 ஆம் பக்கம் பார்க்க



## மன்னார் காத்தான்குளத்தில் விபத்தில் சிக்கி இளைஞர் பலி

(மன்னார்)

மன்னார், காத்தான்குளம் சந்தியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று மாலை 5.15 மணியளவில் மன்னாரிலிருந்து வட்டக்கண்டல் நோக்கிச் சென்ற தனியார் சிற்றூர்தி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மன்னார், பட்டித்தோட்டத்தைச் சேர்ந்த அன்ரன் ஜோசப் அன்ரன் பிஜோஜின் (வயது - 26) என்ற மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவருடன் சென்ற மற்றொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டார். இவ்விபத்து குறித்து விடத்தல்தீவு போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (113)

# பரிந்துரைகள் அமுலாக்கம் சர்வதேசத்திற்கு விளக்கம்

### வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் குழுவொன்று சர்வதேச நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கே இது குறித்து தெளிவுபடுத்தப்படவுள்ளது.

வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

கடந்த முப்பது வருடங்களாக இலங்கையில் நீடித்த யுத்தம் 2009 ஆம் ஆண்டில் நிறைவடைந்த பின்னர் அரசாங்கம் வடக்கு, கிழக்கில் முன்னெடுத்துவரும் அபிவிருத்தி தொடர்பாகவும், இந்தக் குழு தகவல்களை வழங்கவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## மத்திய கிழக்கிற்கு ஜனாதிபதி பயணம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜோர்தான், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய மூன்று நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுடனான இருதரப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆயிரம் படையினரே குடாநாட்டில் பணியில்

### தளபதி ஹத்துருசிங்க தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தான் பதவியேற்றபோது 27 ஆயிரத்து 200 ஆக இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை தற்போது 13 ஆயிரத்து 150 ஆக குறைக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக பதவியேற்று நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் கொழும்பு இராணுவத் தலைமையத்திற்கு பதவியுயர்வு பெற்று மாற்றலாகிச் செல்லவுள்ளமை தொடர்பில் வசாவிளானில் நேற்றைய தினம் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

படையினரால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த பிரியாவிடை நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத் தேவைக்கு மக்களின் காணிகள் சுவீகரிப்பதனை ஈ.பி.டி.பி. எதிர்க்கும்

### சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தவரை மக்களுக்குரிய நிலங்கள் மீளவும் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றோம். அத்தோடு மக்களின் காணிகளை இராணுவத்தினர் இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிப்பதையும் நாங்கள் எதிர்க்கின்றோம்.

ஆனால் அபிவிருத்தி தேவைகளுக்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை. என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் மீள்குடியேற்ற அமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும கருத்துத் தெரிவிக்கையில்,


ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தவரை மக்களுக்குரிய நிலங்கள் மீளவும் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றோம்.



மாற்றுக்காணிகள் வழங்கப்படுவதும் ஒருவருக்கு சொந்தமான நிலத்தில் வேறு ஒருவர் குடியமர்த்தப்படுகின்ற நிலையினையும் நாம் எக்காலத்திலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற விவகாரங்களை கையாளும் அமெரிக்கத் தூதுவர் நாளை இலங்கைக்கு



(கொழும்பு)

போர்க்குற்ற விவகாரங்களை கையாளும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்டத் தூதுவர் ஸ்டீபன் ராப் நாளைய தினம் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை வருகைதரும் இவர் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ளார். இதன்போது அரசாங்க அதிகாரிகளையும், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## சுயஇலாப அரசியலுக்காக இலங்கை விடயம் கையாள்வு

### தமிழக அரசியல்வாதிகள் மீது குற்றச்சாட்டு

இலங்கை விவகாரத்தை தமிழக அரசியல்வாதிகள் சுய இலாபத்திற்காக பயன்படுத்திக்கொள்வதாக இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தங்களது அரசியல் தேவைகளுக்காக இலங்கை விவகாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் விவகாரத்தில் காங்கிரஸ் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

லோக்சபா தேர்தல்களின்

19 ஆம் பக்கம் பார்க்க

## மின்சார நிலைய வீதிக்கு விடிவு எப்போது?

யாழ்.மின்சார நிலைய வீதியானது திருத்தப்படாத நிலையில குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

யாழ்.நகரின் அநேகமான வீதிகள் காப்பெற் இடப்பட்டு அழகாகக் காட்சி அளிக்கின்றபோதிலும் யாழ்.நகரின் மத்தியில் குறிப்பாக பேருந்து தரிப்பிடம் அமைந்துள்ள இவ் வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில காணப்படுகின்றது.

மேலும் குன்றும் குழியுமாக காணப்படும் இவ் வீதியினால் அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு தேவைகருதிச் செல்லும்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதோடு மழை வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய நிலைமையும் காணப்படுகின்றது.இது தொடர்பாக முன்னரும் பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் இவ் வீதி திருத்தப்படாமல் உள்ளது.

இதனை விரைவில் திருத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள வேண்டுகோள் விடுக்கின்றனர்.(ர)

## இந்து ஆலயங்களில் கொள்ளை; தடுக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி




(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களில் தொடரும் கொள்ளைச் சம்பவங்களையும் எமது மக்களின் கலை கலாசார சீரழிவுகளையும் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பேரணி எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பேரணி தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று ஆனைப்பந்தியிலுள்ள யாழ்.சர்வதேச குருமார் ஒன்றியத்தில் இடம்பெற்றது.

ஒன்றியத்தின் தலைவர் சபா வாசுதேவக குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்து சமயப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

"ஓம் நமசிவாய" என்ற வாசகங்களுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்.வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்திலிருந்து மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை சென்றடையும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.அத்துடன் இப் பேரணியில் ஓம் நமசிவாய" என்ற வாசகங்களுடன் பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள் அனைவரையும் கலந்து கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)

## தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அலுமினியம் பொருத்துதல் தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் கரவெட்டி பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உதவியாளரிடம் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

இக் கற்கை நெறியில் கலந்துகொண்டு பூர்த்தி செய்பவர்களுக்கு (NVQ)தரச் சான்றிதழ் வழங்குவதுடன் தொழிற்தகமை தொடர்பான ஆலோசனைகளையும் பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

## பறவைகள் பற்றிய களவாய்வு அடுத்த வாரம் யாழில் ஆரம்பம்

யாழ். குடாநாட்டிலுள்ள "பறவைகள் பற்றி களவாய்வு" எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையும் நடத்தப்படவுள்ளதாக யாழ். சிறுவர் மகிழ்வக உதவி இயக்குனர் ஸ்ரீ.கஜேந்திரன் தெரிவித்தார்.

கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் சரத் கொடகமவின் வழிகாட்டலின் கீழ் கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியல் துறை களப்பறவையியல் குழுவினால் இந்தக் களவாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பறவைகள் களவாய்வு யாழ்.மாவட்ட கரையோரங்கள் மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட இடங்களில் இடம்பெறவுள்ளன.

இலங்கைக்குரித்தான பறவைகள், குடிப்பெயர்வு, குடிவர்வு பறவைகள், பறவைகளின் இனங்கள் போன்றவை இந்த ஆய்வின் மூலம் அடையாளம் காணப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி களப்பறவை ஆய்வு ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கடந்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மன்னாரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை களப்பறவையியல் குழு, யாழ். சிறுவர் மகிழ்வகம், தொண்டமனாறு வெளிக்கள நிலையம் ஆகியன இணைந்து யாழ்மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே இயற்கை விஞ்ஞானத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் "இயற்கை ஊக்குவித்தல் கழகம்" அமைத்து செயற்பட்டு வருவதாக உதவி இயக்குநர் மேலும் தெரிவித்தார். (25)

## மீட்கப்பட்ட மோட்டார் குண்டு படையினரால் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி மேற்கு, செம்மீன் படிப்பக மைதானத்திலிருந்து மீட்கப்பட்ட மோட்டார் குண்டு, வடமராட்சி 521 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவினரால் நேற்று செயலிழக்க செய்யப்பட்டது.

இளைஞர்கள் நேற்று முன் தினம் மாலை இந்த மைதானத்தினைதுப்புரவு செய்த போதே மோட்டார குண்டைக் கண்டுள்ளனர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன், அங்கு வந்த பொலிஸார், இராணுவத்தினருக்கு தகவல் கொடுத்தனர். இதனையடுத்தே அந்தக் குண்டு மைதானத்தில் வைத்து நேற்று செயலிழக்கச் செய்யப்பட்டது.

## நொருங்கியது பெயர்ப் பலகை விஷமிகள் கைவரிசை

(ஊரெழு)

ஊரெழு உப தபாலகத்தின் பெயர்ப் பலகை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விஷமிகளால் அடித்து நொருக்கி கீழே போடப்பட்டுள்ளது.

மறுநாள் காலையில் உபதபாலகத்திற்கு வேலைக்கு வருகை தந்த பொழுது கீழே விளம்பரப் பலகை நொருங்கிப் போயிருந்ததைக் கண்டு தபாலகத்தினர் தபாலக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் இவ் விடயமாக கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (08)

## ஏலத்திற்கு வரும் கட்டாக்காலி மாடு

துன்னாலை மத்தியில் உள்ள மரக்கறித் தோட்டத்தில் நுழைந்து பயிரழிவை ஏற்படுத்தி வந்த கட்டாக்காலி மாடு ஒன்றினை விவசாயிகள் பிடித்து துன்னாலை மத்தி கமக்கார அமைப்பிடம் ஒப்படைத்துள்ளனர்.

கட்டாக்காலி மாட்டினை உரியவர்கள் அடையாளம் காட்டி பயிர் அழிவிற்கான தண்டப் பணத்தினையும் செலுத்தி பெற்றுக் கொள்ளவும் இல்லையேல் கரவெட்டி கமநல சேவை நிலையத்தின் அனுமதியுடன் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என துன்னாலை மத்தி கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (109,கி)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 219 | திகதி 2014.01.03

வெற்றி இலக்கங்கள்

01 26 36 38 X

பரிசுத் தொகை ரூபா 10,000,000/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 04 | 200,000/- |
| [illegible] | 1,000/- | 209 | 209,000/- |
| [illegible] | 1,000/- | 377 | 377,000/- |
| [illegible] | 60/- | 9495 | 569,700/- |
| [illegible] | 40/- | 5088 | 203,520/- |
| [illegible] | 20/- | 126204 | 2,524,080/- |
| [illegible] | 20/- | 18182 | 363,640/- |
| [illegible] | 10,000,000/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,446,940/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா 10,246,480/-

2014.01.07ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

web : www.dlb.lk

(C/3265)


## கணவன், மனைவியை தாக்கி புதுக்குடியிருப்பில் கொள்ளை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தற்காலிக கொட்டகை வீட்டில் வசித்து வந்தவர்களை கறுப்புத் துணியினால் தங்களுடைய முகத்தினைக் கட்டியிருந்த கொள்ளையர்கள் நால்வர், தாக்கிவிட்டு கழுத்திலிருந்த தாலிக்கொடி உள்ளிட்ட சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை நேற்று முன்தினம் அதிகாலை கொள்ளையடித்து சென்றுள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த கணவன், மனைவியை கொள்ளையர்கள், தாக்கி விட்டு, மனைவியின் கழுத்திலிருந்த 4.5 பவுண் தாலிக்கொடி மற்றும் அங்கிருந்த இரண்டு கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட ரூபா 3 இலட்சம் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்றும பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையர்கள் தாக்கியதில் கணவன், மனைவிக்கு தெய்வாதீனமாக எதுவித காயங்களும் ஏற்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவித்தனர்.

## தூக்கில் தொங்கிய நிலையில் யுவதியின் சடலம் மீட்பு

### அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஏ9 வீதி அரியாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் யுவதி ஒருவரது சடலம் நேற்று யாழ்.பொலிஸாரினால் மீட்கப்பட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேஇடத்தில் வசித்துவரும் தர்மலிங்கம் மைதிலி (வயது23) என்ற யுவதியின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவத்தில் குறித்த யுவதி வசித்து வந்த வீட்டின் பின்புறமே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட அதேவேளை சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# யாழ்.மாவட்டத்திற்கு 89 தமிழ் பொலிஸார் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் காணப்படும் பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்பற்றாக்குறைநிலவி வருகின்ற வேளையில் இந்த ஆண்டு 89 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்தியபிரதி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் யாழ்.பிராந்திய பொலிஸ்தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் யாழ் பிராந்திய பிரதி பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் அண்மைக் காலமாக முறைப்பாடுகளை பதியவும், விசாரணை செய்யவுமெனதமிழ் பொலிஸாரின் பற்றாக்குறை நிலவிவந்ததாகவும் இதனை நிவர்த்தி செய்யும் வகையிலேயே பயிற்றுவிக்கப்பட்ட 89 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# புனரமைப்பு பணிகள் தாமதம்

வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையானது கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீள இயங்குவதற்காக புனரமைப்பு வேலைகள் இடம்பெறுவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வந்தன. எனினும் அது தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளதாக அப்பகுதி பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பாடசாலையாக கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் இயங்கி வந்த இப்பாடசாலையில் பல மாணவர்கள் கல்வி கற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கவிடயமாகும். ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் வன்முறைகளால் இப்பாடசாலை முடப்பட்டு சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. எனவே இப்பாடசாலையினை மீளப்புனரமைத்து இயங்க ஆரம்பித்தால் பல பெற்றோர்கள் தமது மாணவர்களை அருகில் உள்ள இப்பாடசாலையில் சேர்ப்பதற்கு ஆவலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பாடசாலையின் புனரமைப்புப் பணிகளை காலம் தாழ்த்தாது விரைவில் மேற்கொண்டு பாடசாலையினை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (85)

# கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கோரல்

(அச்சுவேலி)

மாகாணக்கல்வித் திணைக்களத்தின் வடமாகாணத்தின் மன்னார் வலயத்தில் வெற்றிடமாகவுள்ள மன்னார் மற்றும் நானாட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கு தகைமைகளாக பின்வருவன கவனத்தில் கொள்ளப்படும். அதாவது மூன்று வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடைய இலங்கை கல்வி நிர்வாக சேவை III (பொது ஆளணி) மற்றும் வடமாகாண பாடசாலையைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை 1,2.1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவி வெற்றிடத்திற்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை IIIஇல் பொருத்த மானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இலங்கை ஆசிரியர் சேவை I-2 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை வலயக்கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக்கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாணக் கல்விப்பணிப்பாள்ர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (85)

# நூலக சேவையை பெறமுடியாத நிலை

(பருத்தித்துறை)

கட்டைவேலி உபஅலுவலகத்தின் அல்வாய் பொது நூல் நிலையத்தில் நூலகருக்கான பதில் கடமைக்கு ஒருவர் நியமிக்கப்படாமையால் மாணவர்கள் நூலக சேவைகளைப் பெறுமுடியாது சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

இந் நிலையில் விடுமுறை தினங்களில் திறப்பதில்லை எனவும், கடமையில் உள்ள நூலகர் விடுமுறையில் உள்ளபோது நூல்களை பெறவும், வாசிக்கவும் முடியாது இருப்பதாகவும் மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளர்.

இந் நிலையில் இந்நூலகத்திற்கு பதில் கடமைக்கு ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் மாணவர்கள் மற்றும் வாசகர்கள் நூலகத்தை இலகுவாக பயன்படுத்த முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (109,கி)

# வடமராட்சியில் பட்டம்விடும் சீசன்

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் பட்டம் விடும் சீசன் உச்சக்கட்டத்தினை அடைந்துள்ளது. படலம், வாலான்கொடி, நட்சத்திரம், பெட்டி, கொக்கு, பாம்பு, மனிதன் உள்ளிட்ட பல்வேறு உருவ அமைப்பிலான பட்டங்களை சிறுவர் முதல் பெரியவர் வரை வானத்தில் பறக்க விடுவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இவ்வகையான பட்டங்கள் விண்கூவியவாறு வானத்தில் இரவு பகலாக பறப்பதை இப்பிரதேசத்தில் எங்கு திரும்பினாலும் காண முடிகின்றது. அத்துடன் மின்விளக்கு பூட்டிய பட்டங்களும் இரவில் காணப்படுகின்றன. (109,கி)

# பனைசார் உற்பத்திக்கு மானியமாக உபகரணங்கள்



(நெடுங்கேணி)

நெடுங்கேணி பனை தென்னைகூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழு அங்கத்தவர்களின் பனைசார் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கோடு அவர்களுக்கான உபகரணங்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

நெடுங்கேணி மாறாயிலுப்பை பொதுநோக்கு மண்டபத்தில் பொஸ்ரோ நிறுவனத்தின் வவுனியா திட்ட இணைப்பாளர் ஒஸ்ரீன் தலைமையில் நேற்று முன்தினம். இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் நெடுங்கேணி பனை தென்னை கூட்டுறவு சங்கத்தின் மூன்று மகளிர் குழுக்களுக்களில் 20 பயனாளிகளுக்கு 4,66550 ரூபா செலவில் பொஸ்ரோ நிறுவனத்தினால் பனைசார் உற்பத்திகளை மேம்படுத்துவது தொடர்பான இயந்திரங்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனினால் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. இதற்கு பனை தென்னை கூட்டுறவுசங்க பொது முகாமையாளர் கி.செந்தில் செல்வன் பொது மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(40)




# யதார்த்தத்தைப் புரிந்து மாறிவருகிறதா கூட்டமைப்பு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சிறிய மாற்றம் தென்படுகிறாற் போலத்தெரிகிறது.

அரசியற் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கரைச்சிப் பிரதேச சபை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்காக கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் குகராஜா தலைமையில் பிரதேச சபையின் ஏனைய உறுப்பினர்களும் இணைந்து மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

**'தணிந்துக் கொள்ளக் கூடிய யுத்தத்தின் விளைவுகளை பல்வேறு சவால்களோடு தாங்கள் எதிர்நோக்கி வருகின்றீர்கள் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். யுத்த விளைவுகளின் தொடர்ச்சியாக இருக்கின்ற அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எமது மக்கள் பலத்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவுக்கு வரும் இந்தத் தருணத்தில் இவர்களின் விடுதலை தொடர்பில் விரைவான நடவடிக்கையை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.**

**சிறையிருக்கின்ற குடும்பத்தவர்களுடைய அன்புக்கான ஏக்கம், பிள்ளைகள் மற்றும் தாய் மற்றும் மனைவியரது உறவுக்கான தவிப்பு, அவர்கள் எதிர்கொள்கின்ற சமூக சவால்கள், கலாசார பாதிப்புகள், விரக்தி, வெறுமை என்பவற்றை ஒரு தந்தை என்ற வகையில் தாங்கள் நன்கு உணர்வீர்கள். தனிமனித மனங்களில் ஏற்படுகின்ற பாதிப்புகளை தாங்கள் புரிந்து கொள்வீர்கள். எனவே யுத்தம் நிறைவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்ற 2014 மே 18 ஆம் நாளுக்கு முன்பதாக அனைத்து அரசியற் கைதிகளுக்கும் தாங்கள் கருணை மிகுந்த பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்ய வேண்டும்'** என்று இந்த மகஜரிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறையில் நல்லதொரு மாற்றமாக உள்ளது.

மழையினுள்ளே மருந்திருக்கும்போது அதை விட்டு விட்டு மலையேறித் தேடுவதைப்போல பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கத்துடன் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக, சர்வதேச சமூகத்தை நம்பியிருப்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய அணுகுமுறையாகக் கொண்டிருக்கிறது.

இதில் சிறிதரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், அரியநேந்திரன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் முன்னணி ஆட்கள். இவர்கள் புலம்பெயர்ந்தோரின் விருப்பத்துக்காக இங்கே காவடி ஆடுகிறவர்கள்.

ஆனால், சம்பந்தன், சுமந்திரன், விக்கினேஸ்வரன் போன்றவர்கள் சற்று வித்தியாசமாகச் சிந்திக்க முற்பட்டிருக்கிறார்கள்.

'சர்வதேச சமூகத்தை எல்லாவற்றுக்கும் நாடுவதில் பயனில்லை' என்ற உணர்வை–நடைமுறையில் எதைச் செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் இப்பொழுது நடைமுறையில் கூட்டமைப்பினர் மெல்லமெல்ல உணரத் தலைப்பட்டுள்ளனர் போலுள்ளது.

அதன் ஒரு வெளிப்பாடே கரைச்சிப் பிரதேச சபையின் இந்தத் தீர்மானம். இது 'சூடுகண்ட பூனைக்கு ஞானம் பிறந்த கதை'.

இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னே, இதே பிரதேச சபையில் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தை புனரமைப்புச் செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், அதன் விளைவு துயிலுமில்லத்தை இராணுவ முகாம் ஆக்கியதிலேயே போய் முடிந்தது.

இதை உணர்ந்து கொண்டதால்தான் அரசியற்கைதிகள் விடயத்தில் மாற்று அணுகுமுறையைக் கடைப்பிடித்து ஜனாதிபதிக்கு மகஜர் கொடுக்கப்பட்டுள்ளது போலுள்ளது.

இதைப்போல் வடமாகாணசபையில் ஏற்பட்டுள்ள அரசுக்கும் மாகாண சபைக்கும் இடையிலான இழுபறிகளைத் தீர்ப்பதற்காக முதல்வர் விக்கினேஸ்வரனும் சுமந்திரனும் ஜனாதிபதியைச் சந்தித்திருக்கிறார்கள்.

அப்படிச் சந்தித்தது மட்டுமல்ல, அங்கே பேசப்பட்ட விடயங்களை வெளிப்படுத்துவதிலும் மிகக் கவ்னமான அணுகுமுறையைக் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

கூட்டமைப்பினரின் வழமையைப்போல 'ஜனாதிபதி மறுத்தார். அவருக்குக் காலக்கெடு விதித்தோம். அவரைக் கண்டித்தோம்–எச்சரித்தோம்' என்ற மாதிரி விக்கினேஸ்வரனும் சுமந்திரனும் அறிக்கை விடவில்லை.

ஆகவே உருவாகி வருகின்றவை நல்ல சமிக்ஞைகளே.

ஆனால், இது இப்படியே வளர்ச்சியடைவதை தீய சக்திகள் விரும்பாது. இந்தத் தீய சக்திகள் ஒரு பிசாசுக் கூட்டம்போல உள்ளூரிலும் இருக்கின்றன. புலம்பெயர் நாடுகளிலும் உள்ளன. பிராந்தியத்தில், சர்வதேச சமூகம் என வெளியுலகத்திலும் உள்ளன.

எனவே இவையெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்த நல்ல அணுகுமுறையை குழப்பும். எதிர்க்கும்.

ஆனால், இதைக் கடந்து, இதையெல்லாம் தெரிந்து கொண்டு நின்று பிடிக்க வேண்டும் கூட்டமைப்பு.

அப்படி அது நின்று பிடித்தால், அதனால் பல சாதனைகளைச் சாதிக்க முடியும். அப்படியே தமிழ்ச் சமூகத்தை ஈடேற்றவும் முடியும்.

கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.
- சாணக்கியர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யதார்த்தம் உணர்ந்து மாறுதல்!

புதிதாய்ப் பிறக்கும் ஆண்டுகளின் தொடக்கத்தில் சில பழக்கங்களை விட்டுவிடுவது என்றோ, புதிய பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வது என்றோ சங்கற்பம் எடுத்துக் கொள்ளும் பழக்கம் பலருக்கு இருக்கிறது. பிறகும் பழைய குணங்களை மாற்றாமலே அதே பழைய குருடிக் கதை தொடர்ந்தாலும், வருடப்பிறப்பு உறுதியெடுத்துக் கொள்வதில் பின்னிற்பதில்லை யாரும்.

புதுவருடம் வரப்போகிறது என்றாலே பெரிய சிறிய அழகழகான டயரிகள் தேடுவதில் உள்ள ஆர்வம், தொடர்ந்து அதில் ஏதாவது எழுதுவதில் இருப்பதில்லை அல்லவா, அதுபோலத் தான்! ஆண்டு முடிவில் டயரியை அதே புதுக்கருக்கு அழியாமல் பார்க்கும்போது மட்டும் மனதில் சின்னதாய் ஒரு குற்றவுணர்வு தோன்றுவதோடு சரி.

தனிமனிதர்கள் எடுத்துக்கொள்ளும் உறுதிகள் ஒருபக்கமிருக்கட்டும். சமூகத்திற்கென்று பொதுமனம் இருக்கிறதல்லவா, அந்த மனம் தனது எந்தெந்தக் குணங்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது; மாற்றிக் கொள்ளப் போகிறது என்பதே நாம் துருவியறிந்துகொள்ள வேண்டிய கேள்வி.

நம்முள் ஆழமாக ஊறி இறுகிப்போயிருக்கும் எந்தக் குணங்களை விட்டுவிட்டால் நம் கடந்த காலம் நமக்குச் சுமத்தியிருக்கும் இன்னல்களிலிருந்து மீண்டுகொள்ளலாம் என்று ஒவ்வொருவரும் யோசிப்பது நல்லது.

பருவகால மாற்றங்கள், ஓராண்டு முடிந்து அடுத்த ஆண்டு தொடங்குவது போன்ற நிகழ்வுகள் நாம் வாழும் காலம் குறுகிக் கொண்டே வருகின்றது என்பதை உணர்த்துவதற்காகத்தான். நாம் பொறுப்புணர்வுடன் செயற்படவே வந்து நினைவூட்டுகின்றன. கலிங்கப் போரில் பல்லாயிரக் கணக்கானவரைக் கொன்ற அசோக மன்னன் உடனடியாக அகிம்சை வழியில் சமாதானம் ஏற்படுத்தி வாழத் துணிந்தது காலம் உணர்த்திய உண்மை தான்.

வாழ்க்கை மிகப் பெரிய ஒன்று. நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ள காலமோ மிகச் சிறியது. அதை முற்றிலுமாக இழந்துவிட்டு அல்லது நரகமாக்கிவிட்டு இறந்து போவதில் யாருக்கும் பெருமை இல்லை.

இறப்பு என்பது மட்டுமே மறுக்க முடியாத உண்மை என்ற கவனம் ஏற்படும்போதுதான் வாழ்க்கையை சிதைப்பதன் அபத்தம் விளங்கும். துன்பங்களையும் அவலங்களையும் தொடரவிடுவதிலும், வாழ்வைப் பாழடிப்பதிலும் சிலர் காட்டும் தீவிரத்திலுள்ள மானுடவிரோதமும் குரூரமும் புரியும்.

ஓர் ஆய்வில், சிலரிடம், நீங்கள் வாழப்போகும் காலம் இன்னும் ஒரு வாரம் தான் என்று கூறப்பட்டது. அவர்கள் அந்தக் குறுகிய காலத்திற்குள் தாங்கள் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளவே முயன்றனர். தங்களுக்குத் துன்பம் விளைவித்தவர்களின் பட்டியலை எடுத்துக் கொண்டு பழிக்குப் பழிவாங்கப் புறப்படவில்லை. சாகப்போகும் நேரத்தில் மனசாட்சிக்கு பயந்து நடந்து கொள்வதையே முக்கியமாகக் கருதினர்.

நாம் அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். பழிவாங்கல், வீம்பு, கோபம், குறுகிய சுயலாபங்கள் ஆகியவற்றுக்காக சாமானியர்களின் வாழ்வைப் பணயம் வைக்கக் கூடாது. நம் எல்லோரினதும் இந்தக் குறைவான வாழ்வுக்காலத்தை சின்னாபின்னமாக்கி, வேதனையைத் தவிர வேறொன்றும் காணாமலே போய்ச் சேரும்படியாக ஆசீர்வதித்துவிடக்கூடாது. அழகியதும், அபூர்வமானதுமான இந்த மனித வாழ்வை வரட்டு வீம்புகளால் அழித்துவிடாமல், யதார்த்த நிலைகளுக்கேற்ற முடிவுகளை எடுப்பதற்கு நம் மனங்களை இசைவுபடுத்துவோம். நம் சமூகப் பொதுமனதின் சங்கற்பம் இதுவாகட்டும்!

- ஆசிரியர்.

# சர்வதேச தரத்தில் அடையாள அட்டை; தகவல் திரட்டும் பணிகள் விரைவில்

(கொழும்பு)

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்காக தரவுகள் திரட்டும் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நாடுபூராவும் அமைக்கப்பட்டுள்ள 331 நிலையங்களினூடாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டின் இறுதியில் சகலருக்கும் சர்வதேசதரத்திலான இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மார்ச் மாதத்திலிருந்து கையினால் எழுதப்பட்ட அடையாள அட்டைக்குப் பதிலாக அச்சிடப்பட்ட அடையாள அட்டைகளே விநியோகிக்கப்பட இருப்பதாக குறிப்பிட்ட அவர் வரலாற்றில் முதற்தடவையாக கடந்த வருடத்தில் சகல பாடசாலை மாணவர்களுக்கும் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த ஆட்பதிவு ஆணையாளர் நாயகம்,

இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குவதற்காக தரவுகள் திரட்டும் பணி மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதியில் பூர்த்தி செய்யப்படும். இதற்காக 331 இணைப்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான தலா இரு முகாமைத்துவ உதவியாளர்கள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர சர்வதேச தரத்திலான புகைப்படம் பிடிப்பதற்காக புகைப்படப் பிடிப்பாளர்கள் பதிவு செய்யப்படவுள்ளனர்.

பிரதேச செயலாளர்களின் கண்காணிப்புடன் இணைப்பு அலுவலக பணிகள் முன்னெடுக்கப்படும்.

ஒருவரது தரவு பெறும் போது முழுக்குடும்பத்தினதும் தரவுகள் திரட்டப்படும். 16 வயதுக்கு மேற்பட்ட சகலரதும் தரவுகள் இதன் போது திரட்ட உள்ளோம். விரல் அடையாளங்களும் திரட்டப்படும்.

16 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் அடையாள அட்டை பெறும் போது அதற்காக விண்ணப்பித்தால் மட்டுமே போதுமானது. வேறு தரவுகள் வழங்க வேண்டி ஏற்படாது. மும்மொழிகளிலும் இலத்திரனியல் அடையாள அட்டை தயாரிக்கப்பட உள்ளது. இதனால் திருட்டுத்தனமாக அடையாள அட்டை பெறுவது தடுக்கப்படும் என்றார்.

# உண்டியல் திருடியவர் மடக்கிப்பிடிப்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டைமுனை பகுதியில் உள்ள பள்ளிவாசலின் உண்டியலை உடைத்துகொள்ளையிட முயன்ற ஒருவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கோட்டைமுனை வாவிக்கரை அருகில் உள்ள அவுலியா பள்ளிவாசலின் உண் டியலே இவ்வாறு உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுக் கொண்டிருந்தபோது ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். வெள்ளிக்கிழமை என்பதனால் பள்ளிவாசல் தொழுகைக்குப் பின்னர் அனைவரும் கலைந்து சென்ற பின்னர் ஒருவர் இரும்பு உழிகொண்டு உண்டியலை உடைத்து கொள்ளை யிட்டு பணத்தினை பைகளுக்குள் இட்டுக்கொண்டிருந்தபோது பள்ளிவாசலில் கடமையாற்றும் ஒருவர் கண்டு இவரை மடக்கிப்பிடித்துள்ளார்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர் காத்தான்குடி பிரதேசத்தினை சேர்ந்தவர் எனவும் அவர் ஏற்கனவே குற்றம் புரிந்து சிறைத்தண்டனை பெற்றவர் எனவும் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

# சவுதியில் இலங்கையர் பலர் நிர்க்கதியான நிலையில் தவிப்பு

(கொழும்பு)

தொழில் நிமித்தம் சவுதி அரேபியாவிற்கு சென்று நிர்க்கதிக்குள்ளான மேலும் சில இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிர்க்கதிக்குள்ளான இலங்கையர்கள் சிலர், அந்த நாட்டின் தமாமில் உள்ள 91ஆம் இலக்க முகாமில் தங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவர்கள் உணவுத் தட்டுப்பாடு உள்ளிட்ட சில பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவரகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுதொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக ஊடகப் பேச்சாளரும், பிரதி பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனிய தெரிவிக்கையில், இந்த இலங்கையர்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

தூதரக உத்தியோகத்தர்களின் உதவியுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தொடரபாடல் பிரிவு இவர்கள் குறித்து ஆராய்ந்து பார்த்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுவதற்கு முன்னதாக, அவர்கள் தங்கள் பணியிடங்களில் இருந்து வெளியேறியுள்ளமை தெரியவந்துள்ளது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய சம்பளத்தை வழங்குவதற்கு அவர்களின் எஜமானர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், இந்தப் பணியாளர்கள் விரும்பும் பட்சத்தில் மீண்டும் பணியில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# குளத்தில் பாய்ந்தது பயணிகள் பஸ்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியிலிருந்து நேற்று படுவான்கரைப் பகுதியிலுள்ள பாலையடிவெட்டையை நோக்கி பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து பெரிய போரதீவுச் சந்தியில் வைத்து குளத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இயந்திரக்கோளாறு காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அந்த பேருந்து குளத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவித்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், இதனால் பயணிகளுக்கு எவ்விதமான ஆபத்துகளும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

# பாலியல் தொழிலாளர்கள் நாடு முழுவதும் அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மைக்கலாமாக நாடு முழுவதும் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இலங்கையில் 25 ஆயிரம் தொடக்கும் 37 ஆயிரம் வரையான பாலியல் தொழிலாளர்கள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் பாலியல் சம்பந்தமான நோய்கள் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் மஞ்சுல ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

பாலியல் தொழில் இலங்கையில் சட்ட ரீதியானதாக ஆக்கப்படாமையால் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.

இதனால் உண்மையில் பாலியல் தொழிலாளர்களின் சரியான எண்ணிக்கையை அறிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுகின்ற அதேநேரம், அதனால் ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பிலும் அறிய முடியாதிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# தமிழ் மக்களுக்கு பச்சைத் துரோகம்

**தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் சகல பிரச்சினைகளினதும் நதி மூலம் தேசிய இனப்பிரச்சினை. எனவே, இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது. ஜெனீவா மகாநாடு தமிழ் மக்களுக்கு விமோசனத்தைக் கொண்டுவரும் என்ற பிரசாரம் அர்த்தமற்றது. ஜெனீவா மகாநாட்டின் பேசு பொருள் மனித உரிமை மீறலும் போர்க் குற்றங்களும் மாத்திரமே. இலங்கையின் இனப்பிரச்சினையையோ அதன் தீர்வையோ பற்றி ஜெனீவா மகாநாடு பேசப்போவதில்லை.**

சங்கர சிவன்

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மகாநாட்டுக்கு மேற்கத்திய நாடுகளிலும் பார்க்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடுதலான தயாரிப்புக்களைச் செய்வது போலத் தெரிகின்றது. ஜெனீவாவுக்குச் செல்வதற்கு இப்போதே தயாராகின்றார்கள். இவர்களின் பேச்சுகள் மற்றும் செயற்பாடுகளையும் இவர்கள் சார்பில் சில ஊடகங்கள் செய்யும் பரப்புரைகளையும் பார்க்கும் சாதாரண மக்களிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விட்டது போன்ற உணர்வு ஏற்படுவது இயல்பானதே.

சென்ற தடவையும் இப்படித்தான் நடந்தது. இலங்கை அரசாங்கம் பணியப் போகின்றது என்றும் தமிழ் மக்களுக்கு இனிமேல் ஒரு பிரச்சினையும் இல்லை என்றும் கூட்டமைப்புக்காரும் அவர்களின் ஊதுகுழல் ஊடகங்களும் கூறிய போதிலும் எதுவும் நடக்கவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றியும் போர்க்குற்ற விசாரணை பற்றியும் ஜெனீவா மகாநாட்டில் மேற்கத்திய நாடுகள் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றலாம். இக்கண்டனத் தீர்மானங்களால் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு எவ்வளவு? இலங்கை அரசாங்கம் தலைதூக்க முடியாத நிலை ஏற்படுமா? போர்க்குற்றம் பற்றிய சர்வதேச விசாரணை மூலம் இலங்கைத் தலைவர்களுக்குத் தண்டனை வழங்க முடியுமா?

ஜெனீவா மகாநாட்டில் நிறைவேற்றப்படும் கண்டனத் தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் சில நெருக்கடிகளைச் சந்திக்க நேரும். ஆனால், உள்ளூரில் அரசாங்கத்தின் இருப்புக்கோ அதன் செல்வாக்குக்கோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

மேற்கத்திய நாடுகள் தங்கள் அரசாங்கத்துக்கு எதிராகச் சதி செய்கின்றன என்ற உணர்வில் அரசாங்கத்தின் பாரம்பரிய வாக்கு வங்கியான சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்கள் தங்கள் ஆதரவை மேலும் உறுதிப்படுத்துவதோடு அந்த வாக்கு வங்கி புதிய ஆதரவாளர்களைப் பெற்று விஸ்தரிப்பதற்கும் இடமுண்டு. அரசாங்கம் அதன் பாரம்பரிய ஆதரவாளர்களை இத்தீர்மானம் காரணமாக இழக்கும் நிலை ஏற்படாது. ஜெனீவா மகாநாட்டின் கண்டனத் தீர்மானம் கேடு போலத் தோன்றும் நன்மையாக அரசாங்கத்தின் உள்ளூர் இருப்பைப் பலப்படுத்தும்.

சர்வதேச விசாரணை பற்றிப் பேசுகின்றார்கள். அது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடத்தும் விசாரணையா அல்லது அதற்குப் புறம்பான விசாரணையா என்பது பற்றி எதுவும் கூறவில்லை. உரோமாபுரிப் பிரகடனத்தில் கையொப்பமிட்ட நாடுகள் தொடர்பாகவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை மேற்கொள்ள முடியும். இலங்கை உரோமாபுரிப் பிரகடனத்தில் கையொப்பம் இடவில்லை. உரோமாபுரிப் பிரகடனத்தில் கையொப்பம் இடாத நாடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டுமானால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அனுமதி தேவை. பாதுகாப்புச் சபைக்கு இவ்விடயம் வரும்போது நிரந்தர அங்கத்துவ நாடுகளான சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்குச் சார்பாக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் சாத்தியம் உண்டு. எனவே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் புறம்பான விசாரணை நடைபெறலாம். அந்த விசாரணை மூலம் இலங்கையின் ஆட்சித் தலைவர்களுக்குத் தண்டனை வழங்க முடியாது. அது மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது போன்றது.

மறுபுறத்தில் ஜெனீவா மகாநாட்டின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினை தீருமா எனப் பார்ப்போம். தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் சகல பிரச்சினைகளினதும் நதி மூலம் தேசிய இனப்பிரச்சினை. எனவே, தேசிய இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது. ஜெனீவா மகாநாடு தமிழ் மக்களுக்கு விமோசனத்தைக் கொண்டு வரும் என்ற பிரசாரம் அர்த்தமற்றது. ஜெனீவா மகாநாட்டின் பேசுபொருள் மனித உரிமை மீறலும் போர்க் குற்றங்களும் மாத்திரமே. இலங்கையின் இனப்பிரச்சினையையோ அதன் தீர்வையோ பற்றி ஜெனீவா மகாநாடு பேசப்போவதில்லை.

ஜெனீவா மகாநாட்டின் மூலம் தமிழ் மக்களுக்குப் பெரிதாக நன்மை எதுவும் இல்லை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியாத விடயமல்ல. அப்படியிருந்தும் இந்த மகாநாடு ஒரு வரப்பிரசாதம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கான காரணம் என்ன?

அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடாது என்ற புலம்பெயர் அமைப்புகளின் கட்டளையைக் கூட்டமைப்பு ஏற்றுச் செயற்படுகின்றது. இவ்வாறான கட்டளையை ஏற்றுச் செயற்படும் அமைப்பாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்றது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அரசியல் தீர்வுக்கு ஆதரவாகச் செயற்படக்கூடாது என்று புலிகள் விடுத்த ஆணைக்கு அமைவாகவே சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்துக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதுதான் கூட்டமைப்பின் முதலாவது அரசியல் செயற்பாடு.


தனிநாட்டுக் கோரிக்கையின் பாதகமான விளைவுகளை இலங்கையிலிருந்து அனுபவித்தறியாத புலம்பெயர் அமைப்புகள் இப்போதும் தனிநாட்டுக் கனவிலேயே மிதக்கின்றன. இலங்கையில் அரசியல் தீர்வு எவ்வளவுக்குத் தவிர்க்கப்படுகின்றதோ அவ்வளவுக்கு மக்கள் மத்தியில் தனிநாட்டுக்குச் சார்பான மனோநிலை வளரும் என்று இப்புலம் பெயர் அமைப்புகள் கற்பனை செய்கின்றன. ஆனால், யதார்த்தம் வேறு விதமாக இருப்பது இவர்களுக்குத் தெரியாது. அரசியல் தீர்வு தள்ளிப்போகும் அளவுக்கு மக்களுக்குக் கூடுதலான பிரச்சினைகள் என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும்.

அப்படியிருந்தும் அரசியல் தீர்வைத் தவிர்க்க வேண்டும் என்ற புலம்பெயர் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றார்கள். புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியும் வேறு வசதி வாய்ப்புகளும் தமிழ் மக்களின் நிரந்தர நலனைப் பின்னுக்குத் தள்ளுகின்றன. இதுதான் சுயநல அரசியல்.

இனப்பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டு தீர்வு முயற்சியைத் தவிர்க்க முடியாது என்பதால் கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினையைக் கிடப்பில் போட்டுவிட்டு வேறு பிரச்சினைகள் பற்றியே பேசுகின்றார்கள். இவர்கள் ஏற்பாடு செய்யும் ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள், சத்தியாக்கிரகங்கள் அனைத்தும் இனப்பிரச்சினையைத் தவிர்க்கின்றன. மக்களின் மனதிலிருந்து இனப்பிரச்சினை மறைய வேண்டும் என்பதற்காகவே வேறு பிரச்சின்னகளை முன்னிலைப்படுத்துகின்றார்கள். இனப்பிரச்சினையிலிருந்து மக்களைத் திசை திருப்பி அவர்களிடம் அரச எதிர்ப்பு உணர்வை மாத்திரம் வளர்ப்பதற்கு ஜெனீவா மகாநாடு கூட்டமைப்புக்குக் கைகொடுக்கின்றது. அதனால்தான் ஜெனீவா மகாநாடு தமிழ் மக்களுக்கு வரப்பிரசாதம் என்று படம் காட்டுகின்றார்கள்.

இனப்பிரச்சினையைக் கூட்டமைப்பு கிடப்பில் போடுகின்றதென்பது அதன் அரசியலை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு விளங்கும். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுகின்றார்கள். ஆனால், எத்தகைய தீர்வை அது பெற்றுத் தரும் என்று சொல்வதில்லை. அதைச் சொல்ல இவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பதில் இவர்களுக்கே நம்பிக்கை இல்லை. இனப்பிரச்சினையை ஓரங்கட்டும் தங்கள் செயலைத் தமிழ் மக்களிடம் மூடி மறைத்து அவர்களை ஏமாற்றுவதற்காகவே சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்க்கின்றார்கள். இப்படியே தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருந்தால் இனப்பிரச்சினை ஒருபோதும் தீராத பிரச்சினையாக இருந்துவிடும் என்றும் அந்த நிலை புலம்பெயர் அமைப்புகளைத் திருப்திப்படுத்தும் என்றும் இவர்கள் கருதுகின்றார்கள்.

கூட்டமைப்பின் இந்த அரசியல் தமிழ் மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம். அறுபது வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை தீராதிருப்பதால் தமிழ் மக்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தார்கள். இப்போதும் முகங்கொடுக்கின்றார்கள். எவ்வளவோ இழப்புகளை அனுபவித்துவிட்டார்கள். இப்போதும் அனுபவிக்கின்றார்கள். இனப்பிரச்சினை தீராதிருக்கும் வரை அன்றாடப் பிரச்சினைகளும் இழப்புகளும் தீரப்போவதில்லை. இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களுக்கு விமோசனம். அவ்வாறிருக்க, இனப்பிரச்சினையைக் கிடப்பில் போடும் கூட்டமைப்பின் அரசியலைத் துரோக அரசியல் என்று கூறாமல் வேறெப்படிச் சொல்வது?



**ஜெனீவா மகாநாட்டின் மூலம் தமிழ் மக்களுக்குப் பெரிதாக நன்மை எதுவும் இல்லை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியாத விடயமல்ல. அப்படியிருந்தும் இந்த மகாநாடு ஒரு வரப்பிரசாதம் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கான காரணம் என்ன? அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடாது என்ற புலம்பெயர் அமைப்புகளின் கட்டளையைக் கூட்டமைப்பு ஏற்றுச் செயற்படுகின்றது. இனப்பிரச்சினையிலிருந்து மக்களைத் திசை திருப்பி அவர்களிடம் அரச எதிர்ப்பு உணர்வை மாத்திரம் வளர்ப்பதற்கு ஜெனீவா மகாநாடு கூட்டமைப்புக்குக் கைகொடுக்கின்றது. அதனால் தான் ஜெனீவா மகாநாடு தமிழ் மக்களுக்கு வரப்பிரசாதம் என்று படம் காட்டுகின்றார்கள்.**

# ஒரு காலத்தில் வெடிகுண்டு தயாரித்தவர்கள் இப்போது மனித உரிமை பற்றிப் பேசுகின்றனர்



(கொழும்பு)

தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களும் வெடிகுண்டு தயாரித்தவர்களும் இப்போது மனித உரிமைகள் குறித்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுற்றுலா நுழைவீசாவில் இலங்கை வரும் பல வெளிநாட்டவர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா நுழை வீசாவில் வரும் பல வெளிநாட்டவர்கள், தமது அனுமதிக்காலம் முடிந்த பின்னரும் இங்கு தங்கியிருக்கின்றனர்.

அவர்களை குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்யும் போதோ, விசாரணை செய்யும் போதோ, அதை அவர்கள் மனிதஉரிமை மீறலாக திரித்துக் கூறுகின்றனர்.

தற்போது அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு நாடுகளுக்கு நுழைவீசா பெறு வது மிகவும் கடினமானது. ஆனால் வெளிநாட்டவர்கள், மிகச் சுலபமாகவே சுற்றுலா நுழைவீசாவைப் பெற்றுக் கொண்டு இலங்கை வரமுடிகிறது. இந்த சுதந்திரத்தை புலம்பெயர் தமிழர்கள் தவறாகப் பயன்படுத்த முனைகின்றனர்.

எவரேனும் நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்களை மீறுவதற்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் அனுமதி அளிக்காது.

தீவிரவாதம் மற்றும் குண்டுகள் தயாரிப்பில் தொடர்புடையவர்கள் எல்லாம் இப்போது மனிதஉரிமைகள் குறித்துப் பேச முனைகின்றனர். நாட்டுக்கு எதிராக பொய்யான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை சுமத்த இவர்களை அனுமதிக்க முடியாது. இவர்களுக்கு மனிதஉரிமைகள் என்ற பதத்தின் அர்த்தம் கூடத் தெரியாது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடற்படை வாகனம் விபத்தில் சிக்கியது

## கடற்படை வீரர் மரணம்

(கொழும்பு)

அனுராதபுரம் - யாழ்ப்பாணம் ஹதரஸ் சந்தியின் ரயில் கடவைக்கு அருகாமையில் கடற்படை ஜீப் ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஒரு கடற்படை வீரர் உயிரிழந்துள்ளார். மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

கடற்படை ஜீப் வண்டி, ரயிலில் மோதுண்டதால் விபத்து ஏற்பட்டுள்ளது. புனாவ கடற்படை முகாமின் பொறுப்பாளரது மனைவியும் பிள்ளைகளும் காயமடைந்தவர்களில் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ளது. மாத்தறை நோக்கிப் பயணித்த ரஜரட்ட ரஜின ரயிலில் ஜீப் வண்டி மோதுண்டுள்ளது. ரயிலின் பின்புறத்தில் ஜீப் வண்டி மோதுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வீதி அபிவிருத்திக்கு கடன் 2 பில்லியன் சீனாவிடம் கடன்

(கொழும்பு)

வீதி அபிவிருத்திக்காக இரண்டு பில்லியன் ரூபா கடன் வழங்க சீனா இணக்கம் வெளியிட்டுள்ளது.

93 கிலோ மீற்றர் நீளமுடைய பாதைகள் இவ்வாறு திருத்தி அமைக்கப்படவுள்ளன. நாரந்தெனிய ஹக்மன, அயலகம எகலோய, மாவனல்ல ஹெம்மாத்தகம, கம்பளை வீதி, ஹட்டன்-மஸ்கெலிய டெல்ஹவுஸ். வீதிகள் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

பெருந்தெருக்கள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டதாகவும், இதனை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.நா.வின் அறிக்கையிடும் குழு கொழும்பு நோக்கி விரைவர்

## நவிப்பிள்ளை ஏற்பாடு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் ஆலோசனைக்குழு ஒன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் சாத்தியம் இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது .

அடுத்த மாதம் முதல் வாரமளவில் இந்தக் குழு கொழும்புவரும் எனத் தெரிய வருகிறது .

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை பயணத்துக்குப் பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து மார்ச் தொடரில் அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கிலேயே இந்தக் குழுவின் பயணம் அமையவுள்ளது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே தமது உயர் மட்ட ஆலோசனைக் குழுவை ஐ.நா. ஆணையர் நவநீதம் பிள்ளை கொழும்புக்கு அனுப்புகிறார் எனக் கூறப்பட்டாலும் இதை அவர் இன்னும் உறுதிப் படுத்தவில்லை.

அதேவேளை, இலங்கையின் நிலைவரங்கள் தொடர்பில் நேரடியாக பேச்சு நடத்துவதற்கு தமக்கு நேரம் வழங்குமாறுகோரி சில மனித உரிமைகள் அமைப்புகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன .

இதன்படி, ஜெனிவாவில் நடைபெறும் உபமாநாடுகளின் போது பெரும்பாலும் இந்தச் சந்திப்புகள் இடம்பெறலாம் என ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன . ஐ.நா. ஆணையாளருடன் சந்திப்புக்கு நேரம் கோரப்பட்டுள்ளது என்பதை ஒரு முக்கிய அமைச்சு நேற்று முன்னதிம் மாலை உதயனிடம் உறுதிப்படுத்தியது.



அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையின் மனித உரிமை நிலவரம் தொடர்பிலும், தமது பயணத்தின் பின்னரான இலங்கையின் செயற்பாடுகள் குறித்தும் அறிக்கை வெளியிடவுள்ளார். கடந்த செப்ரெம்பர் மாத தொடரில் அவர் வாய்மூல அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

# மாகாண தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பு

## ஜனாதிபதி கோரிக்கை



(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரசிறி தொடங்கொடவின் மகனுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

1993 ஆம் ஆண்டு தென் மாகாணசபையை பலவந்தமாகவே நிறுவினோம். ஆளுநர் பாகீர் மாகார் கடிதத்தில் கையொப்பமிடவில்லை. பலவந்தமாகவே தென் மாகாணசபையின் ஆட்சியை கைப்பற்றினோம். அமரசிறி தொடங்கொட முதலமைச்சராக பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

மாகாணசபையை நிறுவுதல் தொடர்பான பிரகடனத்தை நானே வாசித்தேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் காலிக்கு சென்றிருந்த போது முதலமைச்சர் சான் விஜயலாலிடம் உரையாடிய போது ஜனாதிபதி மேற்படி தகவல்களைத் தெரிவித்தார்.

# ஓய்வூதிய வயதெல்லை உயர்வு அரசு மீது கண்டனக்கணை

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் கொடுக்கும் வயதை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முடிவை இரத்துச் செய்யுமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை விவசாயிகள் சங்கத்தினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கும் விவசாய காப்புறுதிச் சபைக்குமிடையே கைச்சாத்தான உடன்படிக்கைக்கு முரணாக அரசாங்கம் ஓய்வூதிய வயதை உயர்த்தியுள்ளதாக அகில இலங்கை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

அந்த ஒப்பந்தத்தின்படி, 60 வயதானதும் விவசாயிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடங்கப்பட வேண்டும். ஆனால் தற்போது அரசாங்கம் அந்த வயதை 63 ஆக உயர்த்தியுள்ளமை தவறு என்று நாமல் கருணாரத்ன கூறினார்.

இதனால் சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அகில இலங்கை விவசாயிக்ள் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வரும் விவசாயிகளுக்கு அரசாங்கம் அநீதி இழைத்துள்ளதாகவும் சங்கம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்தப்பட்டுள்ள விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவை செலுத்துவதற்கு, அரசாங்கம் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபா பணத்தை மட்டுமே ஒதுக்கியுள்ளமையும் விவசாயிகளின் அதிருப்திக்கு காரணமாகியுள்ளது.

ஒரு மாதத்துக்கான விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவுக்கு சுமார் 12 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் தேவைப்படுகிறது.

ஆனால் அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத்தைக் கொண்டு 7 மாதங்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் செலுத்த முடியும் என்று விவசாயிகள் சங்கத்தின் தலைவர் கூறினார்.

ஏழு மாதங்களுக்குப் பின்னர் இந்த ஓய்வூதியக் கொடுப்பனவு நிறுத்தப்படும் அபாயம் உள்ளதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

# கொழும்பு பங்குச்சந்தை இப்போது ஏறுமுகம்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குச்சந்தையினூடாக மொத்தமாக 119.4 பில்லியன் ரூபா மூலதனமாக கம்பனிகள் திரட்டியுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமதி 300% அதிகரிப்பாகும்.

இதுவரையில் பதிவாகியுள்ள அதியுயர் மூலதன திரட்டல் பெறுமதி இதுவென்பது குறிப்பிடத்தக்கது. ஆசிய பிராந்தியத்தில் காணப்படும் சிறந்த பங்குச்சந்தைகளில் ஆறாமிடத்தை கொழும்பு பங்குச் சந்தை தனதாக்கியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கொழும்பு பங்குச்சந்தை பல்வேறு விதமான சவால்களை எதிர்நோக்கியிருந்த நிலையில் 2013 ஆம் ஆண்டில் 68.3 பில்லியன் பெறுமதியான கடன்களைத் திரட்டிக் கொண்டமை மற்றும் 34.1 பில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக் கொண்டமை போன்றன சிறந்த சாதனைகளாக அமைந்துள்ளன என பெரும்பாலான ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் வருட நிறைவு ஒன்றுகூடல் கடந்த 30ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் நலன்புரிச்சங்க தலைவர் திருமதி பரமோதயன் ஜெயராணி மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (90)

### பருவமழை பெய்யாததால்

# கிளிநொச்சியில் 75 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அழியும் அபாயம்

(கிளிநொச்சி)

உரிய காலத்தில் பருவமழை பெய்யாமையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 75 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட் டத்தில் நெல் விதைக்கப்பட்ட அனைத்து வயல்களும் போதியளவான நீர் கிடைக்காமையால் வறட்சியடைந்து காணப்படுகின்றன. குளங்களிலும் நீர் இன்மையினால் வயல்கள் அனைத்தும் அழிவடைந்து வருகின்றன. இதனால் விவசாயி களும் பராமரிப்பை கைவிட்டுள்ளனர்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்தின் கீழ் சுமார் 55 ஆயிரம் ஏக்கரில் விதைப்பு மேற்கொண்ட போதிலும் 23 ஆயிரம் நிலப்பரப்பு வயல்களில் மட்டுமே மானாவாரி பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. மிகுதி 22 ஆயிரம் ஏக்கர் வயல்கள் நீர்ப்பாசனத்தை நம்பியுள்ளவைகளாகும்.

அப்பிரதேசத்திற்கு நீர் விநியோகம் இரணைமடுக்குளத்திலிருந்து இடம்பெறுகின்ற போதும் குளத்தின் நீர் மட்டம் 10 அடியாகவுள்ளதால் அவற்றுக்கான நீர்ப்பாசனமும் பத்து நாட்கள் மட்டுமே நடைபெறும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவும் நெல் வயல்களுக்கு போதுமானதாக அமையாது என்கின்றனர்.

இதேவேளை கல்மடு நகரில் சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கரிலும் அக்கராயன் பிரதேசத்தில் 3 ஆயிரத்து 500 ஏக்கரிலும் பூநகரி, முழங்காவில் பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலும் மேற்கொள்ளப்பட்ட நெல் விதைப்புகள் முளை கருகி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன.

# அபராதம் விதிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு கேவில் பகுதி காட்டில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபரொருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்ததுடன் அவரிடம் இருந்து 710 போத்தல் கசிப்பையும் மீட்டுள்ளனர்.

இரகசிய தகவலின் பேரில் குறித்த நபரை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது 50,000ரூபா அபராதம் செலுத்துமாறு பதில் நீதவான் கே.பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டார். (109,கி)

# இரண்டு பாலியல் துஷ்பிரயோகம் நான்கு சந்தேகநபர்கள் கைது

கடந்தவாரம் குடாநாட்டில் இரண்டு பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக யாழ்.உதவி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இது குறித்து தகவல் வெளியிட்ட அவர் உடுப்பிட்டியில் 15 வயது நிரம்பிய சிறுமி ஒருவரும், பருத்தித்துறைப் பகுதியில் 15 வயது நிரம்பிய சிறுமி ஒருவரும் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த இருசம்பவங்களுடனும் சம்பந்தப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். குறித்த பாலியல் துஷபிரயோக சம்பவங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமிகளின் உறவினர்களினால் பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# புதிய நிர்வாகத்தெரிவு

துன்னாலை வேருண்டி மயானத்தை பயன்படுத்துபவர்களில் கரவெட்டி இர்ாஜகிராமத்தவர்களுக்கென தனியான நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மயானம் 4 பிரிவுகளாக உள்ளது. இவற்றை கரவெட்டி இராஜகிராமம், துன்னாலை கிழக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில் மயானம் தொடர்பில் கிராமங்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காகவே மயானத்திற்கு தனியான நிர்வாகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக த.மோகன், செயலாளராக ந.நகுல்வரதன், பொருளாளராக வை.ஸ்ரீவன்லெலன் ஆகியோர் 10 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர். (109,கி)

# பாராட்டுவிழா

அண்மையில் ஜனாதிபதி விருதுபெற்ற நீர்வேலியைச் சேர்ந்த செல்லையா விஸ்வலிங்கத்தை பாராட்டிக்கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இப்பாராட்டு விழாவிற்கு சிவாச்சாரிய பெருமக்கள், கலைஞர்கள், அன்பர்கள், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் வளலாய் சித்திவிநாயகர் தேவஸ்தானக்குரு சிவஸ்ரீ க.ஜெயராமக் குருக்கள் வாழ்த்துரையினையும் வழங்கவுள்ளார். (85)

# முரசின் இன்றைய பலன்



(05.01.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 21 ஆம் திகதி.
சதய நட்சத்திரம் பி.இ. 04.14 வரை. பின் பூரட்டாதி.
சதுர்த்தி / சித்தம்.
இராகுகாலம் 05.01 - 06.31 வரை. சுபநேரம் 09.31 - 11.01 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** சம்பளப்பற்றாக்குறை மற்றும் கௌரவப் பிரச்சினையால் செய்தொழிலைக்கைவிடும் எண்ணப்பாங்கு.

**ரிஷபம்** துன்பம் நேர்ந்தாலும் மனந்தளராமல் எடுத்த செயலில் வெற்றி வாகை சூடல், சுபகாரிய நிகழ்வொன்று எதிர்பாராமல் ஏற்படுவதினால் பண விரயம் உண்டாகும்.

**மிதுனம்** மொழிப்பிரச்சினையால் கருத்தை விளங்கப்படுத்த முடியாது தத்தளித்தல், எந்தவொரு விடயத்திலும் நன்றாக யோசித்து செயற்படுவதால் துயர் விலகிப்போகும்.

**கடகம்** உதவிசெய்ய வெளிக்கிட்டதால் குடும்பத்தில் சந்தேகம் சந்தோஷக்கேட்டை ஏற்படுத்தல், கடன் தீர தொலைபேசி உரையாடல் சாதகமான முடிவினை ஏற்படுத்துவதால் நிம்மதி தக்க வைத்தல்.

**சிம்மம்** விவாக முயற்சி கைகூடியதால் வெளியூர் பயணத்தைக் கைவிடும் உத்தேசம், பணவரவுகளில் நெருக்கடி ஏற்படுவதினால் பொருட்களை கொள்வனவு செய்ய இயலாமை ஏற்படும்.

**கன்னி** வரக்கூடுமென எதிர்பார்க்கும் இடமாற்றம் பற்றிய பிரச்சினையை இரத்துச் செய்ய அதிகாரிகளைச்சந்தித்தல், குடும்பத்தில் தேவையற்ற குழப்பமொன்று தோன்றி மறைதல்.

**துலாம்** தொழில்ரீதியாக மேற்கொள்ளும்பயணத்தில் அலைச்சலும் வேளைதப்பிய உணவும் ஏற்படல்,

**விருச்சிகம்** எதிர்பார்க்கும் உயர்வுகள் இடமாற்றங்கள் சிறிய தடைகளுக்குப்பின் கிட்டிவிடும், சம்பளம் குறைவாகக் காணப்படுவதினால் தேடிவந்த வேலையினைப்புறக் கணித்தல்.

**தனுசு** சுற்றாடல் மனதிற்கு வேதனை அளிப்பதினால் மனையை வாங்க விருப்பமின்றிக் கைவிடுதல், நாவைக் காத்திதனால் வந்த வில்லங்கம் கெடுதியைத்தராமல் விலகிச் செல்லல்.

**மகரம்** உணவில் எண்ணெய், இனிப்புச்சத்து காணப்பட்டதால் நோய் வாய்ப்பட்டு அவதியுறல், குடும்ப அங்கத்தவரைப்பாதுகாக்க துணையின்மையால் வெளியூர் பயணத்தைத்தற்காலிகமாக கைவிடல்.

**கும்பம்** பிள்ளையை தத்தெடுக்க நினைத்தல், தொலைக்காட்சியில் ஒன்றியிருக்கும் பிள்ளையைக் கண்டிக்க வெளிக்கிட்டதால் களேபரம் உருவாதல்.

**மீனம்** மனதை வருத்திவந்த பிரச்சினை சுமுகமாக தீரவழியேற்பட்டதால் மகிழ்வடைதல், திருமணத்திற்கு நிலவிய பாரிய தடையொன்று விலகியதால் மனநிம்மதி ஏற்படுதல்.

# உங்களின் தொழில் தெரிவுக்கு வழிகாட்டும் ஜோதிடம்

ஜோதிர் வித்யாரத்னா வி.ஏ.சிவராசா

## பிறந்த திகதிகள் 03,12,21,30

சமூகசேவை, பொது நலக்காரியங்கள், அரசாங்க உத்தியோகங்கள் தர்மஸ்தாபனங்கள், இராணுவம், கவர்ச்சிகரமான பேச்சினால் நடத்தவேண்டிய தொழில்கள் ஒழுக்கத்தால் உயர்வடையக்கூடிய பணிகள், நுண்ணிய அறிவு கொண்ட பௌதிகம், இரசாயனம், விலங்கியல் சாத்திரம், ஆராய்வுகள், தொல்பொருளியல், பிறருக்கு யோசனை கூறுதல் முதலிய தொழில்கள் ஏற்றவை. கூட்டெண் 4 எனின் பிரசித்த பிரசங்கியாகவும் கூட்டெண் 1அல்லது 6 எனின் அதிகார தோரணையான தொழிலும் தித்திக்கும்.

(தொடரும்)

# அசையாத மங்கை இவள் அடி பணியாது ஒருபோதும்



(பிரிஸ்பேன்)

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு, நட்சத்திர வீராங்கனைகள் செரீனா வில்லியம்ஸ் - விக்டோரியா அசரென்கா ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.


பிரிஸ்பேன் ரென்னிஸ் தொடர் மகளிர் ஒன்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மரியா ஷரபோவா (ரஷ்யா), முதல் நிலை, வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) ஆகியோர் மோதினர். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியின் முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் செரீனா வில்லியம்ஸ் எளிதாகக் கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் சுதாகரித்துக் கொண்டு விளையாடிய ஷரபோவா கடும் நெருக்கடி கொடுத்ததால் ஆட்டம் இழுபறியாக நீடித்தது.

பரபரப்பான டை பிரேக்கரில் போராடி வென்ற செரீனா 6-2, 7-6 (9-7) என்ற நேர் செட் கணக்கில் ஷரபோவாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் நட்சத்திர வீராங்கனை விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) 1-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் சேர்பியாவின் ஜெலினா ஜேன்கோவிச்சை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இந்நிலையில் அசரென்கா, செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாய்ப்புக் கேட்கிறார் வட்மோர்



## வழங்குமா பாகிஸ்தான்

(டுபாய்)

மீண்டுமொரு வாய்ப்புக் கிடைத்தால் பாகிஸ்தான் கிரிக்கெட்டிற்கு பணியாற்ற விரும்புவதாக அதன் தற்போதைய பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராகநியமிக்கப்பட்ட டேவ் வட்மோர், தனது 2 வருடகால ஒப்பந்தத்தின் முடிவில் பெப்ரவரியுடன் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகவுள்ளார். தனது இறுதித் தொடராக இலங்கைக்கெதிரான தொடரில் அவர் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தனது பதவிக்காலத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் சிறந்த உறவைப் பேணியமை சிறப்பானது எனவும், எதிர்காலத்தில் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் ஏதாவதொரு பதவியில் பணியாற்றத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

2 வருடங்கள் இணைந்து பணியாற்றிய வீரர்களை விட்டுச் செல்லும் அந்த உணர்வு காணப்படுகின்ற போதிலும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், தானும் சிறந்த உணர்வுகளுடன் பிரிகின்றமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். பாகிஸ்தான் அணிக்குப் பயிற்சி யளிப்பது, சிறந்த அனுபவமாக அமைந்ததாகக் குறிப்பிட்ட வட்மோர், ஆனால் மொழிப் பிரச்சினை காரணமாக தொடர்பாடலென்பது கடினமாக அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உள்நாட்டைச் சேர்ந்த ஒருவரை பயிற்றுவிப்பாளராக நியமிப்பதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இதன் முதற் கட்டமாக வட்மோருக்குப் பதிலாக தற்காலிக பயிற்றுவிப்பாளராக மொயின்கானை நியமிக்க அது முயன்று வரும் நிலையில் வட்மோரின் ஆசை கானல் நீருக்கு ஒப்பானதாகவே இருக்கும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# அட்னன் அக்மல் விலகல்

(டுபாய்)

இலங்கை அணிக்கெதிரான ஏனைய டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் அட்னன் அக்மல் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது, அட்னன் அக்மல்காயமடைந்தார். கௌஷால் சில்வா வழங்கிய பிடியைப் பிடிக்கும் போது அட்னன் அக்மலின் இடது சுட்டு விரலில் முறிவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் இந்தப் போட்டியிலும், எஞ்சியுள்ள 2 போட்டிகளிலும் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அட்னன் அக்மலுக்குப் பதிலாக சப்ராஸ் அஹமட் அடுத்த 2 போட்டிகளுக்குமான குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# டரன் சமி வெளியேற்றம்

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் குழாமிலிருந்து டரன் சமி வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே அவர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

2ஆவது போட்டியில் பங்குபற்றிய டரன் சமி, அதன் பின்னர் ஏற்பட்ட பின் தொடைத் தசைநார் உபாதை காரணமாக 3ஆவது போட்டியிலும் பங்குபற்றியிருக்கவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட், ருவென்ரி-20 அணிகளின் தலைவரான டரன் சமி, இந்த ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முடிவில் நடைபெறவுள்ள ருவென்ரி-20 போட்டித் தொடரில் பங்குபற்றக்கூடிய வாய்ப்பு இருக்குமா? இல்லையா என்பது குறித்து தற்போது கருத்துத் தெரிவிக்க முடியாது என மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. டரன் சமி பங்குபற்றாதுவிட்டால் டரன் பிராவோ ருவென்ரி-20 போட்டிக்குத் தலைமை தாங்குவார் எனவும் தெரிவித்துள்ளது.

# 58 ஓட்டங்களால் வென்றது நியூ சிலாந்து



(நெல்சன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான நான்காவது ஒரு நாள் பேர்ட்டியில் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி நியூசிலாந்து அணி 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. மூன்று போட்டியின் முடிவில் தொடர் 1-1 என சமநிலையிலிருந்துள்ளது. நான்காவது போட்டி நெல்சனில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குப்ரில் 81, ரைடர், வில்லியம்ஸன் ஆகியோர் தலா 47, ரெய்லர் 49 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டுவைன் பிராவோ இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 286 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 33.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை, மழையால் போட்டி பாதிக்கப்பட்டது. தொடர்ந்தும் மழை பெய்தமையால் டக் வோர்த் லூயிஸ் முறைப்படி நியூசிலாந்து அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துடுப்பாட்டத்தில் சிமன்ஸ் 43, டுவைன் பிராவோ ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நதன் மக்கலம், வில்லியம்ஸன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக குப்ரில் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இறுதி ஒரு நாள் போட்டி எதிர்வரும் புதன் கிழமை ஹமில்டனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிட்னியிலும் சீறிப் பாய்கிறது ஆஸி.

(சிட்னி)

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் ரோஜர்ஸ் அரை சதம் கடக்க, அவுஸ்ரேலிய அணி 311 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

அவுஸ்ரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி பாரம்பரியம்மிக்க 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகின்றது. முதல் நான்கு போட்டியில் வென்ற அவுஸ்ரேலியா 40 என தொடரை ஏற்கனவே கைப்பற்றியது. கடைசி மற்றும் ஐந்தாவது டெஸ்ட் சிட்னியில் நடைபெற்று வருகின்றது. அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 326 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை இங்கிலாந்து அணி தொடர்ந்தது. அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய இங்கிலாந்து அணி ஏதோ தேங்காய் வெடித்துச் சிதறுவது போல விக்கெட்டுக்களை களத்தில் மளமளவென பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் சகலதுறை வீரர் ஸ்டோக்ஸ், பேர்ஸ்டோவ் ஜோடி நிதானமாக ஆடியபோதும், தொடர்ந்து நிலைத்து நிற்க முடியவில்லை. தொடர்ந்து களமிறங்கிய ஸ்ருவெர்ட் புரொட் இறுதி வரை போராடியபோதும் அவருக்கு எவரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக் களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்டோக்ஸ் 47, ஸ்ருவெர்ட் புரொட் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஹரிஸ், ஜோன்சன், பீற்றர் சிடில் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக், களைக் கைப்பற்றினர்.

171 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி ஒரு முனையில் விரைவாக விக்கெட்டுக் களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ரோஜர்ஸ் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தார். இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக ரோஜர்ஸுடன் இணைந்த பெய்லி அணிக்குப் பலம் சேர்க்கும் வகையில் தனது ஆட்டத் திறனை வெளிப்படுத்தினார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ரோஜர்ஸ் 89 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 73, ஜோர்ஜ் பெய்லி 32 பந்துகளை எதிர்கொண்டு 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.




## தெல்லிப்பளை கிழக்கு கலைச்செல்வி இளைஞர் கழக மென்பந்து

# காமாட்சி, கலையொளி இன்று பலப்பரீட்சை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கிழக்கு கலைச்செல்வி இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இன்றைய இறுதிப் போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியும், இணுவில் கலையொளி அணியும் மோதவுள்ளன.

தெல்லிப்பளை கிழக்கு கலைச்செல்வி இளைஞர் கழகம் ஏற்பாடு செய்து நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று இடம்பெற்று வருகின்றது.

அணிக்கு ஆறு பேர் 5 ஓவர்கள் கொண்ட போட்டியாகவே இச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி தெல்லிப்பளை கட்டுவன்புலம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் நடைபெறவுள்ளது.

இதில் கொக்குவில் காமாட்சி அணியும், இணுவில் கலையொளி அணியும் மோதவுள்ளன.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் காமாட்சி அணியும் கொட்டடி பால்ராஜ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய கொக்குவில் காமாட்சி அணி 5 ஓவர்கள் நிறைவில் 82 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் ரம்மியாகுலன் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வியசன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 83 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய கொட்டடி பால்ராஜ்அணி 5 ஓவர்களில் 69 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அழகன் 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜெயரூபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் கொக்குவில் காமாட்சி அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய அணியும் இணுவில் கலையொளி அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய அணி 5 ஓவர்கள் நிறைவில் 40 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வாமனன் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தர்சன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 41 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய இணுவில் கலையொளி அணி 4.3 ஓவர்கள் நிறைவில் வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மோகன்ராஜ் 15 ஓட்டங்களைப் பெற்றார். இவ்வெற்றியின் இணுவில் கலையொளி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, தெல்லிப்பளை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழகத்தலைவர் நிரோஷன் தலைமையில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன் கலந்துகொள்ளவுள்ளார்(48)

## காலிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பம்

(அராலி)

உழவர் திருநாளை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினால், நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட அணி களிற்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டிகள் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் காலிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இதன்படி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து 4.30 மணிக்கு நடைபெறவுள்ள 2ஆவது காலிறுதிப் போட்டியில் அராலி அண்ணா பி அணியை எதிர்த்து தெல்லிப்பளை நாமகள் ஏ அணி மோதவுள்ளது.

இதேவேளை, நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள மற்றைய காலிறுதிப் போட்டிகளில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் அராலி அண்ணா ஏ அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் அணியும், தொடர்ந்து 4.30இற்கு இடம்பெறவுள்ள மற்றைய காலிறுதிப் போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணியும் மோதவுள்ளன.

(48, 93)

### கூர்மைப்படுத்த புது யுக்தி

மீண்டும் எனது பந்து வீச்சுத் திறனை கூர்மைப்படுத்திய புது யுக்தியுடன் களமிறங்கவுள்ளதாக இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மலிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டித் தொடர் வரை அணியில் விளையாட விரும்புவதாகவும், அதற்கிடையில் பந்துவீச்சில் பல மாற்றங்களை மேற்கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மெய்வல்லுநர் பயிற்சி வகுப்பு

இலங்கை மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னோடி பயிற்சி வகுப்புக்கள் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பயிற்சி வகுப்பு இன்றைய தினம் முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து பரீட்சார்த்திகளையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். இதில் துறை சார்ந்த நிபுணர்கள் பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(93)

# கொக்குவில் கே.சி.சி.சி. அபார வெற்றி

(கொக்குவில்)

நியூ ஸ்ரார்ஸ் பிறிமியர் லீக் சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 67 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ். நியூஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் நடாத்திவரும் நியூஸ்ரார்ஸ் பிறிமியர் லீக் ருவென்ரி -20 போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியொன்றில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இ.இராகுலன் 50; ஜெயரூபன் 34, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எஸ்.திலீபன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஸ்ரீகுகன் 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சாம்பவன் நான்கு, ஜெயரூபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 67 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (48)

### விரைவில் இறுதிப் போட்டி

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி அடுத்த வார பிற்பகுதிக்குள் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் குருநகர் பாடுமீன் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டி சீரற்ற கால நிலை காரணமாகப் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கரப்பந்து போட்டியில் வென்ற அணிகள்

(அராலி)

தைப்பொங்கலை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தி வருகின்றது.

வலிகாமம் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டிகளில் கடந்த 2,3ஆம் திகதிகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

2ஆம் திகதி நடைபெற்ற முதல் போட்டியில் சங்கானை நியூஸ்ரார் அணியும், ஆனைக்கோட்டை கலைவாணி அணியும் மோதின. இதில் சங்கானை நியூஸ்ரார் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் பன்னாலை கணேசன் அணியும் சங்கானை நியூஸ்ரார் அணியும் மோதின. இதில் நியூஸ்ரார் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் சங்கானை பாரதி அணியும், சுழிபுரம் விக்டோரியா அணியும் மோதின. இதில் சங்கானை பாரதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் அராலி மாவத்தை அணியும், சண்டிலிப்பாய் கல்வயல் விநாயகர் அணியும் மோதின. இதில் கல்வயல் விநாயகர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியும், சங்கானை பாரதி அணியும் மோதின. இதில் பிரதீப் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

(93)

# கிண்ணம் கொக்குவில் காமாட்சி வசம்




(யாழ்ப்பாணம்)

கொம்மாந்தறை விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி கைப்பற்றிக்கொண்டது.

கொம்மாந்தறை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 31ஆம் திகதி இரவு கொம்மாந்தறை விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இதில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியும், கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அயன் 44, ஜெயசீலன் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சேந்திரன் நான்கு, அனுசயந்தன், ஜெனி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் ராம் 24, துசியந்தன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிஷா நான்கு, அருண் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியைச் சேர்ந்த அயன், தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த ஜெயரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(48)

# ஏன் இந்த நிலை?

- சாலையூரான் -



வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும், கிழக்கு மக்களையும் வடக்குடன் இணைக்க வேண்டும் தவறினால் தமிழர்களுக்கு இழைத்த அநீதிக்காக சர்வதேசத்துக்கு பதிலளித்தாக வேண்டுமென கூறிக்கொண்டிருந்த விக்னேஸ்வரன் தட்டுத்தடுமாறி இப்போது ஜனாதிபதியிடம் போய் தான் எதிர்கொள்ளும் துன்பங்களை முறையிட்டிருக்கிறார்.

வடமாகாண சபையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் தான் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை இந்தச் சந்திப்பில் ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் எடுத்து விளக்கியிருக்கிறார்.

இந்த முதல்வருக்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை கையாள்வதற்கு வசதியாக இரு சந்தர்ப்பங்கள் அரசாங்கத்தால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன.

அதில் ஒன்று, அனைத்து மாகாண முதல்வர்களுடனான சந்திப்பு. மற்றையது யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவை வழிநடத்திச் செல்வதற்கான இணைத்தலைமை வாய்ப்பு.

மாகாண முதல்வர்களுடனான சந்திபுக்கு செல்லாமல் விட்டதன் மூலம் வடக்கின் மாகாண சபைக்காக பிரத்தியேகமாக அரசு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை வெளிப்படுத்தும் வாய்ப்பை வடக்கு முதல்வர் தவிர்த்துக் கொண்டார்.

உண்மையில் இந்தச் சந்திப்பின் மூலம் இடப்பெயர்வுக்குள்ளான மக்களுக்காக அவசியம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள், மீள் குடியமர்வுக்காக சாத்தியமாக விடுவிக்கக் கூடிய சில பிரதேசங்கள், உட்பட கணிசமான பிரச்சினைகளை தீர்க்க சக மாகாண முதல்வர்களின் ஒப்புதலை கோரும் வாய்ப்பு வடக்கின் முதல்வருக்கு இருந்திருக்கிறது.

பிரச்சினைகளை முன்வைத்து அரசுத் தரப்பில் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்காக குரல்கொடுப்பவர்களின் அனுதாபத்தையாவது அவர் பெற்றிருக்க முடியும்.

சரி, இச்சந்திப்பை நிராகரித்தாலும் யாழ்.மாவட்டத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவுக்கான இணைத்தலைமை பதவியை சாத்தியமான சில நடவடிக்கைளுக்காக ஏற்று சில திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சித்திருக்கலாம்.

இந்த வாய்ப்புக்கள் எல்லாம் தேடிவந்த சந்தர்ப்பங்களில் அரசை முழுமையாக நிராகரிக்கும் அரசியலை முன்னெடுப்பதிலேயே குறியாக இருந்துவிட்டு இப்போது வடக்கு மாகாண கபையை என்னால் நடாத்த முடியவில்லையென ஜனாதிபதியிடம் முறையிடுவது கோழைத்தனமான நடவடிக்கையாகும்.

வடக்கின் ஆளுநரை நிராகரித்தால் தனது அதிகாரங்களுக்கு உட்பட்டு அவர் எத்தகைய நடவடிக்கைகளில் இறங்குவார்; அதனால் எத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை முன்னரே அனுமானித்து அதற்கேற்ப நடந்துகொள்வதே புத்திசாலித்தன நடவடிக்கையாக இருந்திருக்கும்.

மாகாண சபைக்கான வெற்றிடங்கள் ஆளுநரின் ஆலோசனையுடன் உள்ளூராட்சி அமைச்சால் நிரப்பப்பட வேண்டியவை. இதில் பொருத்தமான தாம் விரும்பும் நபர்களை உத்தியோகத்தர்களாக அமர்த்திக்கொள்ள வேண்டுமாயின் ஆளுநருக்கும் மாகாண முதல்வருக்குமிடையே இணக்கமான உறவு அவசியம்.

அவ்வாறெனின், இதே ஆளுநரை அப்புறப்படுத்தப் போவதாக பிரசாரம் செய்துவிட்டு தம்முடன் பேசியே ஊழியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இவர்கள் எந்த முகத்துடன் ஜனாதிபதியை கோர முடியும்?

இந்த விடயங்கள் தமிழ் கூட்டமைப்பினருக்கு. ஒன்றும் புரியாத விடயங்களல்ல. மாகாண சபையை பொறுப்பேற்ற நான்கு மாத காலத்தில் இவ்வாறு அரசுடன் சுமுகப் பேச்சை ஏன் நடத்தவில்லையென்ற குற்றச்சாட்டை யாராவது தம்மீது சுமத்திவிடக் கூடாதென்பதற்காகவே ஜனாதிபதியிடம் இவர்கள் சென்றிருப்பதாக தெரிகிறது.

மார்ச் ஜெனீவா கூட்டத் தொடரில் இதுபற்றி யாராவது கேள்வி எழுப்பினால் தாம் ஜனாதிபதியுடன் பேசினோம். அரசாங்கம் தமக்கு ஒத்துழைக்கவில்லையென்று பந்தை மறுபக்கத்துக்கு அடிப்பதற்கு வசதியாகவே இந்தச் சந்திப்புக்கு வடக்கு முதல்வர் சென்றிருப்பதாக தெரிகிறது.

# வடக்கு மாகாண சபையால் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டா?




- வே. அர்ச்சுணன் -

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்கு முன்னர் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழமே தமது இறுதி இலக்கு என விடாப்பிடியாக இருந்த போதிலும் அந்த அரசியல் இலக்கு குறிப்பிட்ட அளவிற்கு முன்னேற்றத்தை எட்டவில்லை. இதற்குப் பிரதான காரணம் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியான போரை முன்னெடுத்ததும், அந்த ஆயுத ரீதியான போரை விடாப்பிடியாக கடைப்பிடித்ததும், அரசியல் தீர்வு மற்றும் அரசியல் இலக்கு என்பன தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து - அதாவது உலக அரசியல் ஒழுங்கிற்கேற்ப விட்டுக்கொடுத்து செயற்படாமல் விடாப்பிடியான அணுகுமுறையை கைக்கொண்டமையால் ஆயுதப் போராட்டம் ஆட்டம் கண்டு இறுதியில் முள்ளிவாய்க்கால் முடிவுகளுடன் முற்றுப்பெற்று விட்டது.

இந்த நிலையில் தமிழ்மக்களின் கதாநாயகர்கள் தாங்கள் மட்டும்தான் என்று கூறி களமிறங்கியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்குமாகாண சபைதான் தமிழர்களின் அரசியல் இலக்கு என்ற ரீதியில் செயற்பட்டு வருகிறது. இருந்த போதிலும் இந்த வடக்கு மாகாண சபையைக்கூட சீராக இவர்களால் இயக்க முடியுமா? என்ற அளவிற்கு தற்போது நிலமைகள் பாராதூரமாக போய்க்கொண்டிருக்கிறது.

இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் மத்திய அரசின் கீழ் செயற்படவேண்டிய கட்டாயம் மாகாண சபைக்கு இருக்கிறது. மத்திய அரசை எதிர்த்தோ அல்லது மத்தியஅரசுடன் முரண்பட்டோ மாகாண நிர்வாகத்தை ஒருபோதுமே மாகாண அரசால் நடத்த முடியாது. ஆனால் வடக்கு மாகாண சபையோ மத்திய அரசுடன் போட்டிபோடும் ஒரு அரசாக தன்னைக் காட்டிக்கொண்டு தமிழ் மக்களுக்கு கிடைக்க இருக்கின்ற நன்மைகளை தட்டிப் பறித்து வருகின்றது.

குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு மத்திய அரசின் ஆதரவு மட்டுமல்லாமல் அந்த அரசில் அங்கம் வகிக்கும் மாகாண எதிர்க்கட்சி கூட அதன் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிப்பதாக பகிரங்கமாக தெரிவித்துள்ளது. மத்திய அரசுடன் மட்டுமல்லாது மாகாண அரசுடனும், இணக்க அரசியலை முன்னெடுக்கவே தாம் விரும்புவதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாகவே அழைப்பு விடுத்திருந்தார். எனினும் இந்த அழைப்பை நிராகரித்துள்ள கூட்டமைப்பு தனது செயற்பாடுகளை நியாயப்படுத்தி ஒருதலைப் பட்சமாக தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் அதேவேளை வடக்கு மாகாண ஆளுநருடனும் முரண்பாடான நிலைப்பாட்டிலேயே செயற்பட்டு வருகிறது.

குறிப்பாக வடக்கு முதல்வர் ஆளுநருடன் முரண்பட்டு வருவதுடன் அவருடன் பேசுவதற்கே மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. வடக்கு மக்களின் நன்மை கருதியும், எதிர்காலத்தில் மாகாண நிர்வாகத்தை சீராக இயக்கும் வகையிலும் முதல்வர் விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு ஆளுநர் சந்திரசிறி அழைப்பு விடுத்த போதிலும் அந்த அழைப்பை முதல்வர் தட்டிக்கழித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண சபையின் பல்வேறு நிர்வாக விடயங்கள் தொடர்பாக நல்லிணக்கமான முறையில் கலந்துரையாடும் வகையில் ஆளுநர் இரண்டு கடிதங்களை ஏற்கனவே முதல்வருக்கு அனுப்பியதாகவும், எனினும் இந்த இரண்டு கடிதங்களுக்கும் முறையான பதிலெதுவும் முதல்வரிடமிருந்து கிடைக்காத நிலையில் கடந்த 17ஆம் திகதி மூன்றாவது கடிதத்தை ஆளுநர் அனுப்பியதாகவும் தெரியவருகிறது. இருவருக்குமிடையில் தொடர்ந்தும் இழுபறியான நிலைமை காணப்படுவதுடன், உடன்பாட்டுக்கு வரமுடியாத சூழலில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால் வடக்கு அபிவிருத்தியும் கேள்விக்குறியாகும் நிலையிலேயே தற்போது உள்ளது.


இந்த நிலையில்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனோ கணேசனின் 54 ஆவது பிறந்த தினத்துக்கு வாழ்த்துத் தெரிவித்து தொலைபேசியில் அவருடன் உரையாடியபோது சில கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது வடக்கு மாகாணசபை சுமுகமாக இயங்கவேண்டும், ஆளுநரும் முதலமைச்சரும் முரண்பட்டுக் கொள்ளக் கூடாது இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஆளுநர் சந்திரசிறியும் 13ஆம் திருத்தத்தின் பிரகாரம் கூட்டுக்குடித்தனம் செய்ய வேண்டியவர்கள். ஆனால், இன்று அங்கு முரண்பாடு முற்றி விவாகரத்தாகும் நிலை உருவாகி வருகிறது. வடக்கின் மக்கள் ஆணையை பெற்ற முதல்வரும் நிறைவேற்று அதிகாரத்தின் ஆணையை பெற்றுள்ள சந்திரசிறியும் முரண்பட்டுக் கொள்கிறார்கள். அந்த மாகாணசபை சுமுகமாக நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்பதை தமிழ் மக்களுக்கு சொல்லுங்கள். ஆளுநரும் முதல்வரும் முரண்படக்கூடாது ஒருவரை ஒருவர் அனுசரிக்க வேண்டும். செயலாளர்களை மாற்றுவது பற்றி எனக்கு சரியான தகவல்கள்

# வண்ணத்திரை வானில் புன்னகை நட்சத்திரம்

- ஆரூர்தாஸ் -

1956இல் தேவர் பிலிம்சின் தொடக்கத்தில் முதல் "தாய்க்குப்பின் தாரம்" படக்கதாநாயகி பி.பானுமதி! 1957இல் அடுத்த "நீலமலைத்திருடன்" நாயகி அஞ்சலிதேவி! 1958இல் மூன்றாவது "செங்கோட்டைச் சிங்கம்" படத்தில் ஆரம்பித்து 1963"இல் "நீதிக்குப்பின்பாசம்" வரையில் 6 ஆண்டுகளில் தொடர்ந்து 8 படங்களில் சரோஜாதேவி கதாநாயகி!

அடுத்து 1964இல் "வேட்டைக்காரன்" ஒரே படத்தோடு சாவித்திரி அவராகவே அகன்று கொண்டார்.



'தாழம்பூ' படத்தில் எம்.ஜி.ஆர். கே.ஆர்.விஜயா

இப்பொழுது அதே 1964இல் எம்.ஜி.ஆரை வைத்து இன்னொரு படத்திற்காக இரண்டு நாயகிகளைக் கொண்ட ஒரு கதையைத் தேர்வு செய்தோம்.

யார் அந்த இரண்டு நாயகிகள்?

அதைச் சொல்வதற்கு சில மாதங்கள் முன்செல்ல வேண்டும்.

15.11.1963 தீபாவளித் திருநாள்!

அன்றைய தமிழ்த் திரைப் பட உலகின் முடிசூடா மூவேந்தர்களான எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் ஆகிய மூவர் நடித்த மூன்று படங்களும் அன்று ஒரே நாளில் வெளிவந்து மூன்றுமே வெற்றி பெற்று நூறு நாட்களுக்கு மேல் ஓடி விழா கண்டன!

1. எம்.ஜி.ஆர் - சாவித்திரி நடித்த "பரிசு!"
2. சிவாஜி - தேவிகா நடித்த "அன்னை இல்லம்!",
3. ஜெமினி - சாவித்திரி, கே.ஆர்.விஜயா நடித்த "கற்பகம்!"

இந்த மூன்றில் "பரிசு", "அன்னை இல்லம்" ஆகிய இரண்டு படங்களும் நான் வசனம் எழுதியவை.

"கற்பகம்" கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் தயாரித்து, இயக்கி எழுதிய படம்.

தீபாவளிக்கு மறுநாள்தான் "கற்பகம்" படத்தைப் பார்க்கச் சென்றேன். அறிமுக நடிகை கே.ஆர்.விஜயாவைப் பார்த்து அசந்துவிட்டேன்! அந்தப் புன்னகை வெகுகாலம் திரையுலகை ஆளும் என்று பட்டது.

"தெய்வநாயகி" என்ற இயற்பெயர் கொண்ட விஜயாவின் பூர்வீகம் கேரளா. அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்து குமரன் குடிகொண்டிருக்கும் பழனியில் குடிஅமர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். அவரது தந்தை பழனி தேவஸ்தான அலுவலகத்தில் ஏதோ ஒரு பொறுப்பில் இருந்தவர்!

தாய் மொழி மலையாளம் என்றாலும் தமிழகத்து மண்ணில் பிறந்து வளர்ந்ததால் தமிழே தாய்மொழியாகி விட்டது. விஜயாவுக்கு சகோதரர்கள் யாரும் இல்லை. உடன் பிறந்த சகோதரிகள் இருவர். சாவித்திரி, வத்சலா.

இந்தத் தகவல்களுடன் தேவர் அண்ணனிடம் சென்றேன். புதுப்படத்தின் பிரதான - மெயின் ஹீரோயின் வேடத்திற்கு கே.ஆர்.விஜயாவை சிபார்சு செய்து, "கற்பகம்" படத்தைப் பார்க்கும்படி சொன்னேன்.

அவர் பார்த்தார். விஜயாவைப் பிடித்திருந்தது. எம்.ஜி.ஆரிடம் சென்றோம். விஜயா புதிது என்பதால் முதலில் அவர் சற்றுத் தயங்கினார். வழக்கம்போல என் வார்த்தை ஜால வாய்க்காலைத் திறந்துவிட்டேன்! அவ்வளவுதான். முதலில் தயங்கியவர் இப்பொழுது மயங்கினார்.

எப்பொழுதுமே நம்மைவிட பெரியவர்களிடம் "கர்ச்சனை" செய்வதைக்காட்டிலும் அவர்களை "அர்ச்சனை" செய்தால் காரியம் எளிதாக முடிந்துவிடும்!

"மெயின் ஹீரோயின்" விஜயா என்று முடிவானது! அடுத்த அந்த "இரண்டாம் ஹீரோயின்" யார்? அதை எம்.ஜி.ஆரே முடிவு செய்தார். அந்தச் சமயத்தில் நாகிரெட்டியாரின் "எங்கவீட்டுப்பிள்ளை" படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. அதில் எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்தார். முதல் கதாநாயகியாக சரோஜாதேவியும், இரண்டாவது நாயகியாக "குமாரி ரத்னா" என்ற புதுமுக நடிகையும் நடித்தனர். அவரையே இந்தப்படத்திலும் நடிக்க வைக்கும்படி எம்.ஜி.ஆர். பரிந்துரைத்தார். அண்ணன் ஏற்றுக்கொண்டார்.



மற்றபடி தேவர் பிலிம்சின் ஆஸ்தான அப்பா மற்றும் வில்லன் நடிகர்களான எம்.ஆர்.ராதா, எம்.என்.நம்பியார், எஸ்.ஏ.அசோகன், நகைச்சுவைக்கு நாகேஷ், மனோரமா!

வாகினி ஸ்டுடியோவில் பூஜையுடன் படப்பிடிப்பு தொடங்கியது. வழக்கம்போல் எம்.ஏ.திருமுகத்தின் கிராஸ் ட்ரொலி ஷொட். வழக்கம்போல் எம்.ஜி.ஆர். "வெற்றி வெற்றி வெற்றி" என்று கூறிக்கொண்டு ஒருபுறமிருந்து ஓடிவந்தார். எதிர்ப்புறமிருந்து "எனக்கும்தான் வெற்றி" என்று கூவிக்கொண்டு புது மயிலான விஜயா ஒயிலுடன் ஓடிவந்தார். அவரைக்கண்டு அங்கிருந்த அனைத்து விழிகளும் விரிந்து அகலமாயின!

விஜயாவின் வாழ்க்கைப் பூங்காவில் "அதிர்ஷ்டத்தென்றல்" வீச ஆரம்பித்துவிட்டது. இன்னொரு எம்.ஜி.ஆர். படமும் அவரைத் தேடிவந்தது.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் ஒலிப்பதிவாளராக இருந்த பத்மநாப அய்யரும், பிரபல ஒளிப்பதிவாளரான டபுள்யூ. ஆர்.சுப்பாராவும் (இந்தத் தந்திரக்காட்சி நிபுணரின் மாணவர்தான் பிரபல ஒளிப்பதிவாளரும், இயக்குனரும், தயாரிப்பாளருமான - மறைந்த எம்.கர்ணன்! இவர்தான் நான் முதன் முதலாக இயக்கிய "பெண் என்றால் பெண்" படத்தின் ஒளிப்பதிவாளர்.) தயாரிப்பு நிர்வாகியாக இருந்த சுலைமான் ஆகிய மூவரும் இணைந்து, "பத்மா பிலிம்ஸ்" என்னும் பட நிறுவனம் தொடங்கி, "மனமுள்ள மறுதாரம்", சிவாஜி, சரோஜாதேவி நடித்த "வளர்பிறை" போன்ற சில படங்களைத் தயாரித்தனர்.

இப்பொழுது எம்.ஜி.ஆரை வைத்து ஒரு படம் தொடங்கினர். எம்.ஜி.ஆர். பரிந்துரையின் பேரில் - கதாநாயகியாக கே.ஆர்.விஜயாவும், வசன கர்த்தாவாக நானும், இசை அமைப்பாளராக கே.வி.மகாதேவனும், பாடலாசிரியராக கண்ணதாசனும், எம்.ஜி.ஆர். பிக்சர்சில் அதுவரையில் துணை இயக்குனராக பணிபுரிந்து வந்த எஸ்.ராமதாஸ் இயக்குனராகவும் நியமிக்கப்பட்டோம். அந்தப்படம்தான் "தாழம்பூ."

1964இல் தேவர் பிலிம்சின் படத்தோடு தொடங்கப்பட்ட இந்த "தாழம்பூ" தாமதமாக 23.10.1965இல் தான் மடல் திறந்து மலர்ந்து வெளிவந்தது. அதற்கு முன்னதாக 24.9.1964இல் தேவர் பிலிம்சில் நான் எழுதிய ஏழாவது எம்.ஜி.ஆர். படம் வெளிவந்து வழக்கம்போல் வெற்றி பெற்றது. அந்தப்படம்தான் "தொழிலாளி."

இந்தப் படங்களுக்குப் பிறகு விஜயாவை "அதிர்ஷ்டம்" துரத்தத் தொடங்கியது.

---


இல்லை. இவை என்னிடம் நேரடியாக சொல்லப்பட வேண்டும். மாகாண சபை நிதி ஒழுங்குகள் பற்றிய சட்டம் இருக்கிறது. அதை இரு சாராரும் கடைப்பிடிக்க வேண்டும். முதல்வரிடம் இதுபற்றி நான் உடனடியாக உரையாடவுள்ளேன் இதை அவர்களுக்குச் சொல்லுங்கள். தமிழ் மக்களிடமும் சொல்லுங்கள். இன்னொன்றையும் அவர்களிடம் சொல்லுங்கள் வடக்கு மாகாண சபையைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் வடக்கின் பாடசாலைகளுக்குச் சென்று இனவா[illegible]க்கும் பரப்புரைகளை செய்கிறார்கள் என எனக்குத் தெரிய வந்துள்ளது" என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

உண்மையில் வடக்கு மாகாண சபை சீராக இயங்கினால் என்ன இயங்காவிட்டால் என்ன அதனால் பெரியளவில் பாதிப்புக்கள் அரசாங்கத்திற்கு ஏற்படாது. ஆனால் மாகாண சபைக் கட்டமைப்பை பொறுப்பெடுத்து அதன் அனைத்து சுகபோகங்களையும் மாகாண அமைச்சர்களும், உறுப்பினர்களும் அனுபவித்தவாறு, அதன் செயற்பாட்டை திறம்பட மேற்கொள்ளாவிட்டால் உண்மையில் பாதிக்கப்படப்போவது சாதாரண தமிழ்மக்களே ஆகும். இவர்களுக்கு நம்பி வாக்களித்த மக்கள் எந்தவொரு அபிவிருத்தியும் இன்றி நடுத்தெருவில் நிர்க்கதியாக விடப்படுவார்கள்.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்த கட்சியான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மகாணசபை முறையை எதிர்த்ததுடன், தேர்தலிலும் பங்கெடுக்காமல் நியாயம் கூறிக்கொண்டது. அதாவது பல்லாயிரம் மக்களின் சாவை வைத்து நாங்கள் அரசியல் செய்ய விரும்பவில்லை என்று கூறி ஒதுங்கிக் கொண்டது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அந்தப் பல்லாயிரம் உயிர்களை வைத்து தியாகங்களை வைத்து அரசியல் செய்து தற்போது அந்த மக்களை நடுத்தெருவில் விட தயாராகி வருகிறது.

---

# இந்த நாடுகளில் இப்படி...!



• ஜேர்மனியில் 65 வயதுக்கு மேற்பட்ட எல்லாருமே பஸ்ஸில் அரை டிக்கெட் வாங்கினால் போதும்.

• பிரான்ஸில் மேசைத் துணி மேல் எதையும் சிந்திக் கறைபடுத்தாமல் சாப்பிடும் குழந்தைகளுக்கு டிப்ஸ் கொடுக்கிறார்கள் ஹோட்டல் சிப்பந்திகள்.

• இங்கிலாந்தில் குளிர்காலத்தில் சாலைகளில் பனி உறைந்து போயிருக்கும்போது, பனிக்கட்டியை உருகி ஓடச் செய்யும் பொருட்டு அதன் மீது உப்பைத் தெளிப்பார்கள்.

• ரஷ்யாவில் குழந்தை பிறக்கும்போது அது ஆணா, இல்லை பெண்ணா என்று கேட்பதில்லை. எத்தனை கிலோ எடை என்றுதான் கேட்கிறார்கள்.

• அவுஸ்திரேலியாவில் உள்ள ஜிப்ஸிபொயின்ற் என்ற ஹோட்டலில் கங்காருகளை பிலியர்ட்ஸ் விளையாட பழக்கி வைத்திருக்கிறார்கள். பிலியர்ட்ஸ் ஆடி, அவை களைப்படைந்தால் "லவுஞ்சில்" உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதை பார்க்கலாமாம்.

• இந்தியத் தலைநகர் டெல்லியில் "குளியலறை மியூசியம்" உள்ளது. விக்டோரியா மகாராணி, அவுஸ்திரேலிய இளவரசி ஆகியோர் பயன்படுத்திய குளியல் தொட்டி மாதிரிகள் அங்கு உள்ளன. 14ஆம் லூயி பயன்படுத்திய மொடல்களும் உள்ளன.

• லண்டனில் லண்டன் டவர் என்ற புகழ்பெற்ற கோட்டை கோபுரத்தில் பல அண்டங்காக்கைகள் ஆனந்தமாய் வாழ்கின்றன. அந்தக் காக்கைகளைக் கருத்தோடு கவனித்துக் கொள்கிறார்கள்; அரசாங்க செலவிலேயே பராமரிக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்தக் காக்கைகள் அகன்று விட்டால் லண்டன் டவர் இடிந்து விழுந்துவிடும் என்பதாக தொன்றுதொட்டு இருந்துவந்த நம்பிக்கையே.

# மீள்குடியேறியோரின் மேம்பாட்டுக்காக சமுர்த்தி அலுவலர்கள் கடுமையாக உழைப்பு



(வடமராட்சி)

யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு மீண்டும் ஆரம்பத்திலிருந்தே தொடங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அவர்களது பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைத்துள்ளார்கள் என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, அம்பன் சமுர்த்தி வங்கிச் சங்கத்தில், சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமாக மாற்ற மடையும் சம்பிரதாய நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் முகாமையாளர் அப்புத்துரை ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏழைகளின் உணவு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்காக அரசாங்கம் பல்லாயிரம் கோடி ரூபாகளைச் செலவு செய்கின்றது. ஏழைகளின் வறுமையைப் போக்க பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துகின்றது. ஆனாலும் ஏழ்மை நிலை நீங்கவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வடமராட்சி கிழக்கு மக்களே யுத்தம் காரணமாக பாரிய இடப்பெயர்வைச் சந்தித்துள்ளனர். அவர்களது மறுவாழ்வு மீண்டும் ஆரம்பத்திலிருந்தே தொடங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. சமுர்த்தி ஒதுக்கீடுகள் மீள்குடியேறிய மக்களுக்கு போதாமல் இருந்துள்ளது. அதனைப் பகிர்ந்தளிப்பதில் கடினமும் உள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களை கைதூக்கி விடுவதற்குப் பதிலாக வறுமைக் கோட்டையே மாற்றி அமைத்து, ஏழைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டும் முயற்சியில் ஈடுபடக்கூடாது

தற்போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமாக மாற்றப்பட்டதனூடாக வறுமை ஒழித்தல், வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல், மக்களின் தொழில் விருத்திக்கு நிதி வசதி வழங்குதல் உட்பட பல்வேறு நலத்திட்டங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இதனூடாக ஏழைகளின் கனவுகள் மெய்ப்பட வேண்டும் அரசாங்கத்தின் நோக்கமும் நிறைவேற வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## நிறைவடையாத நிலையில் பேருந்து தரிப்பிட புனரமைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நிதி வீதி தம்பாலைச் சந்தியில் நீண்டகாலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடமானது முழுமையாக புனரமைக்கப்படாது உள்ளதாக பயணிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து தரிப்பிடமானது பயணிகள் இருப்பதற்கான இருக்கை வசதிகளின்றிய நிலையிலே காணப்படுகின்றது. இதனால் பயணிகள் பேருந்து வரும் வரை கால் கடுக்க நின்றே பயணிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் பேருந்து தரிப்பிடத்தில் உள்ளபகுதிகள் சிமெந்து போடப்படாது மண்நிலமாகவே காணப்படுவதுடன் விலங்குகளின் கழிவுகள் மற்றும் குப்பைகளுடன் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் பயணிகள்பல்வேறு அசௌகரியங்களை தாம் எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் குறித்த பேருந்துத் தரிப்பிடத்தை பயணிகளின் பாவனைக்கேற்ற விதத்தில் புனரமைத்து வழங்குமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.(85)



புங்குடுதீவு இறுப்பிட்டி ஐங்கரன் சனசமூக நிலைய இலவச மருத்துவ சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. புங்குடுதீவில் உள்ள 4, 5, 6, ஆம் வட்டாரங்களில் உள்ள மக்களில் 65இற்கு மேற்பட்ட நோயாளர்கள் மருத்துவர் கி.சிறிபாஸ்கரனிடம் தங்களின் நோய்களுக்கான பரிசோதனையையும் மருந்து வசதிகளையும் பெற்றுக் கொண்டனர். (90)

## கட்டட இடிபாடுகளால் போக்குவரத்துக்கு இடையூறு

(திருசெல்வேலி)


கொக்குவில் கிருபாகர ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வீதியில் கட்டட இடிபாடுகள் கொட்டப்பட்டு கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கோவில் நிர்வாக சபையினருக்கும், நல்லூர் பிரதேச சபையினருக்குமான விசாரணை கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

சம்பந்தப்பட்ட இரு பகுதியினருக்குமிடையே தீர்வு ஒன்று எட்டப்படாமையினால் இவ் விடயம் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவுள்ளது. பதினைந்து நாட்களுக்குள் வழக்கைத்தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை கோவில் நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

கட்டட இடிபாடுகளை அகற்றத் தவறினால் அதனை அகற்றுவதற்கான ஏற்பாடுகளை சட்ட திட்டங்களுக்கமைய நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும் என அறிவித்திருந்த நிலையில் நிர்வாக சபையினர் பொலிஸ் நிலையத்தில் சபைக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

பிரதேச சபையின் சார்பில் தலைவரும், உறுப்பினர் ஒருவரும், கோவில் நிர்வாக சபையின் தரப்பில் அதன் தலைவர், செயலாளர் ஆகியோரும் விசாரணையின் போது சமூகமளித்திருந்தனர்.(137)

# உணர்வுகளை குழிதோண்டி புதைப்பது சரியா?



மனித வாழ்வில் உணர்வுகள் முக்கியமானவை. பல சமயங்களில் நாம் எமது உணர்வுகளில் வாழ்கின்றோம். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணர்வு வெளிப்பாடு மிகவும் முக்கியமானது. இதற்கான பயன் தரவுள்ள படிமுறைகளைச் சிந்திப்போம்.

**உணர்வுகளை இனம் காணுதல்:-**

இதுதான் முதற்படி. பல உணர்வுகள் எமக்குப் பழக்கமானவை. மகிழ்ச்சி ஆச்சரியம், பயம், பாலுணர்வு, வெறுப்பு, குற்றவுணர்வு, கோபம், பொறாமை திருப்தி என அவை பல வகைப்படும். இந்த உணர்வுகளுள், எமது தற்போதைய உணர்வு என்ன என்பதற்கான விடை எமக்குத் தெரிந்திருத்தல் நன்று. உணர்வுகளைப் புரிந்து கொள்ளப் பின்வரும் வழிமுறைகள் பயனுடையவை.

**சுய உரையாடல்:-**

எம்முடன் நாம் உரையாடக் கற்றுக் கொள்வதன் மூலம் எமது உணர்வுகளை நாம் புரிந்துகொள்ளலாம். நாம் பல தடவைகளில் ஆச்சரியப்படும் அளவுக்கு எமது உணர்வுகள் வேறுபடுவதை இச்செயன் முறையின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.



**எழுதுதல்:-**

எமக்காக நாம் செலவிடும் நேரங்களில் இதனை மேற்கொள்ளலாம். ஒரு அமைதியான குழப்பமில்லாத இடத்தில் உணர்வு வெளிப்பாட்டை அடிப்படையாக வைத்து மனம் விரும்பிய போக்கில் எழுதுவது எமது உணர்வுகளை எமக்கு வெளிப்படுத்தும்.

**நட்புடன் அளவளாவுதல்:-**

எமக்கு நம்பிக்கை உறவுகளில் எம்மை நாம் வெளிப்படுத்தும் போது எமது உணர்வுகளை நாம் இனங்காணலாம்.

**உணர்வுகளை ஏற்றுக்கொள்ளலும், பொறுப்பெடுத்தலும்:-**

இது இரண்டாம் படி. மிகவும் முக்கியமானதும் கூட. நாம் இனங்காணக்கூடிய வையே தீர்மானிக்கின்றது. இது ஒவ்வொருவருக்கும் தனித்துவமானது. நாம் இனங்கண்ட ஏற்றுக் கொண்ட ஒவ்வோர் உணர்வையும் ஆரோக்கியமாக வெளிப்படுத்தும் போது நாம் ஆளுமையில் வளர்ச்சியடைகின்றோம். பொதுவாக நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவது எமக்கு இலகுவானதாகவும் எதிர் மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவது எமக்கே கடின்மானதாகவும் அமையலாம். குறிப்பாக எதிர்மறையான

### இது ஒரு மருத்துவ சிலாகிப்பு

எல்லா உணர்வுகளையும் எம்முடைய உணர்வுகளாக ஏற்றுக்கொள்வதும் அவற்றுக்கு நாம் தான் பொறுப்பு எனப் பொறுப்பு எடுப்பதும் இன்றியமையாதன. பொதுவாக எதிர்மறை உணர்வுகளான கோபம், பொறாமை, குற்றவுணர்வு போன்றவற்றைப் பொறுப்பெடுக்க நாம் விரும்புவதில்லை.

உதாரணம். நான் கோபப்பட்டேன் என்று சொல்வதைத் தவிர்த்து எனக்கு கோபம் வந்தது என்று கூறுவதைக் குறிப்பிடலாம். சில உணர்வுகளை ஏற்றுக் கொள்வதில் எமக்குப் பண்பாட்டு ரீதியான தடைகள் தடங்கலாக இருக்கலாம், பாலுணர்வு அவற்றில் முக்கியமானது.

**உணர்வுகளை ஆரோக்கியமாக வெளிப்படுத்துதல்:-**

இந்தச் செய்முறை எமது வாழ் உணர்வுகளை ஆரோக்கியமாகக் கையாளுதல் எமக்கும் பிறருக்கும் மிகவும் முக்கியமானதாகும். உதாரணம் 'நான் கோபத்தில் கத்திவிட்டேன்' அல்லது நான் கோபத்தில் எனது பிள்ளையை அடித்து விட்டேன் போன்ற வாக்கியங்கள் நாம் அடிக்கடி கேட்பவை.

**எதிர்மறையான உணர்வுகளைக் கையாளும் போது கவனிக்கவேண்டியவை:-**

- அவ்வுணர்வுகள் நியாயமானவையா எனச்சிந்தித்தல்

உதாரணம் கோபம் நியாயமானதா? என்ற வினாவுக்கு விடை தேடுதல்.

- அது நியாயமானதெனில் அதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய முற்படல்
- எனது வரம்புக்குள் அக்காரணத்தை நிவர்த்தி செய்ய முற்படல்
- இதற்காகப் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டி ஏற்படலாம்.
- நிவர்த்தி செய்யமுடியாத காரணங்களாயின் உணர்வு வெளிப்பாட்டைமையப்படுத்திச் செயற்படுதல், இதற்கும் உரையாடுதல், எழுதுதல், வாய்விட்டுப் பிரார்த்தனை செய்தல், அழுதல் போன்ற முறைகளை? பயன்படுத்தலாம்.
- சரியான நேரத்தில் பொருத்தமான நபரிடம் பொருத்தமான அளவில் பொருத்தமான முறையில் உணர்வுகளை வெளிப்படுத்தல் மிகவும் முக்கியமானது.

உணர்வுகளை இனங்கண்டு உணர்ந்து அவற்றுக்கு உரிமைகோரி உவப்புடன் வெளிப்படுத்தினால் நாம் ஆளுமையில் வளர்ச்சியடைவோம். அதைவிடுத்து உணர்வுகளை உயிருடன் புதைத்தால் அவை ஒருநாள் உயிர்த்தெழும். அது பூகம்பமாக வெடிக்கும்.

*வைத்திய கலாநிதி பு.து.பிரதீபன்*
*MBBS, MD (இலங்கை)*
*அவுஸ்ரேலியா*

# அமைச்சர் திஸ்ஸகரலியத்த கிளிநொச்சிக்கு நாளை விஜயம்

(கிளிநொச்சி)

சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸகரலியத்த கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு நாளை திங்கட்கிழமை வருகைதரவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார் இதில் 4 பிரதேச செயலர்களும் வட மாகாணத்தைச சேர்ந்த 175 உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட உத்தியோகத்தர்கள்,சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் , மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், உளவளதுணையாளர்கள், முன்பிள்ளை பராய அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அமைச்சரால் வட மாகாணத்தின் 33 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள பெண்கள் சிறுவர்கள் பிரிவிற்கு கணனிகள், தளபாடங்கள், காகிதாதிகள் என்பன வழங்கப்பட உள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம், வெள்ளிக்கிழமை அமைச்சர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகைதருவதாக இருந்த நிலையில் குறித்த திகதிக்கு வருகை பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (90)

# வலி.வடக்கு கலாசார பேரவையால் 10 கலைஞர்கள் கௌரவிப்பு

வலி.வடக்கைச் சேர்ந்த 10. கலைஞர்களுக்கு கலாசாரப் பேரவையினால் கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் கலாபூசணம் விருது பெற்ற நான்கு கலைஞர்களுக்கான கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது.

வலி வடக்கு கலாசாரப் பேரவையின் கலைஞர் கௌர விப்பும் கலாசார விழா நிகழ்வும் வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசாரப் பேரவைத் தலைவர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருதுகள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டார்கள். கலைச்சுடர் விருதுகளினை வஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் (ஆன்மீகம்) சின்னத்தம்பி சுப்பையா (ஆயுள் வேதம்) இராசையா பேரின்பநாயகம் (சமூக சேவை) சுப்பிரமணியம் பரமநாதன் (சமூக சேவை) கணேசையர் சௌந்தரராஜன் (ஆவணப் படுத்தல்) விஜயராகவன் கோகுலத்வனி( வீணை மென்ரலின்) சரஸ்வதி கோபாலசாமி (இசை) செல்லத்துரை சிதம்பரநாதன் (நாதஸ்வரம்) சரவணமுத்து விநாயகரத்தினம்) (பல்துறை) தம்பாப்பிள்ளை கனகசிவநாயகம் (சிவத் தொண்டு) ஆகியோரும்,

கலாபூஷணம் விருதுபெற்ற கலைஞர்களுக்கான கௌரவத்தினை சங்கரம்பர் கதிரவேலு (புகைப்படத்துறை) செல்லப்பா சண்முகநாதன் (சிற்பம்) சின்னப்பொடி ஐயாத்துரை (ஒப்பனை நாடகம்) அழகர்சாமி பாலசுதந்திரன் (நாதஸ்வரம்) ஆகியோரும் பெற்றுக்கொண்டார்கள்.

கலாசார விழாவின் கலை நிகழ்வுகளாக கிராம சேவையாளர் மாலதிதேவி மதிவதனின் காலம் கனியும் கவியரங்க நிகழ்வும், எஸ்.ரி.குமரன் எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்கலைஞர்களின் நடிப்பில் தரிசனங்கள் நாடக ஆற்றுகையும், நகுலேஸ்வரம் சிறுவர் கழக மாணவி சிந்துஜா சிவனேஸ்வரனின் நடன நிகழ்வும் கலை இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (63)

# இலக்கிய குவியத்தின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய குவியத்தின் ஏற்பாட்டில் சமகால இலக்கியம் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இல் 128 டேவிட் வீதியிலுள்ள திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ளது. இணையத்தமிழ் அறம் (இணையத்தில் தமிழில் எழுதுபவர்களின் அறஉணர்ச்சி) பற்றிய நிலாந்தன், இன்றைய தமிழ் படைப்புகள் (ஈழத்தின் இலக்கிய செயற்பாட்டு முயற்சிகள்) பற்றி உரையாடல் கருணாகரன் ஆகியோர் கருத்துரைகளினை வழங்கவுள்ளார்கள். இவரகளின் அறிமுகத்துடன் இக் கலந்துரையாடல் ஆரம்பித்து வைக்கப்பட்டு பின் இலக்கியம் பற்றிய போக்கையும் சமகால இலக்கிய ஆளுமைகள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களுக்கிடையிலான நட்பை வளர்க்கும் படியும் கலந்துரையாடல் அமையவுள்ளது. (63)

# சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

2014ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை இளைஞர் கழகத்தின் புனரமைப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்லூரியின் அதிபர் திருமதி பஞ்சாட்சரம் தலைமையில் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச இளைஞர் கழக சம்மேளன உபதலைவருமான க.உஷாந்தன், இளைஞர் சேவை அதிகாரி நவசக்தி, பிரதேச இளைஞர் கழக சம்மேளன அமைப்பாளர் ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய ஆண்டிற்கான இளைஞர் கழகத்திற்கான நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. புதிய ஆண்டுக்கான தலைவராக எஸ்.கிருஷாந்தினி, செயலாளராக கே.லட்சியப்பிரியா, பொருளாளராக ஆர்.டினேஷாந்தினி, அமைப்பாளராக என்.சிந்துஜா, உபதலைவராக பி.லக்ஷனா, உப செயலராக அ.சாம்பவி ஆகியோர் தெரிவானார்கள். அத்துடன் ஏனைய துறைக்கான தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (48)



கோண்டாவில் ஸ்ரீஅற்புதநர்த்தன சனசமூகநிலையம் மற்றும் கோண்டாவில் குமரன்விளையாட்டுகழகம் இணைந்து அண்மையில் நடாத்திய இரத்ததான முகாமில் இளைஞர்கள் இரத்ததானம் செய்வதைக்காணலாம். (48)

# பதிவிருக்கப் பெட்டகம்

சந்திரனுக்குப் போய் கொடியை நாட்டிவிட்டீர்கள். ஆனால் சாலையைக் கடப்பதற்குள் உயிர் போய் திரும்பி வருகிறது. ஆஸ்பத்திரிகள் பெருகியிருக்கின்றன. ஆனால் நாட்டில் இருப்பவர்களில் பாதிப்பேருக்கு மேல் உடல்நலம் கெட்டிருக்கிறது. படிப்புக்கும் கல்விக்கும் உங்களுக்கு வேறுபாடு புரியவில்லை. படைப்புக்கும் எழுத்துக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இலக்கிய வாசிப்பு அதிகரித்திருக்கிறது. ஆனால் ஒரு பாரதியை உங்களால் உருவாக்க முடியவில்லை.

செய்திகள் இடைவிடாமல் பொழிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவை சிந்தனையில் தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. அடுத்த நாட்டில் குண்டு விழுந்ததற்காகக் கூடி அழுகிறீர்கள். ஆனால் கூடப்படிப்பவனைக் கொலைவெறி கொண்டு ஒரு கூட்டம் தாக்குகிறது. ஆனால் அதைக் குறித்து எங்கும் எந்தச் சலனமும் காணோம். அரசியல் எங்கள் காலத்தில் தேசத்தை ஒன்று சேர்த்தது. இன்று அரசியல் உங்களைப் பிளவுபடுத்துகிறது. வாகனம், தொடர்பு, மருத்துவம், இலக்கியம், சினிமா, எங்கும் தொழில்நுட்பம் செழித்திருக்கிறது. ஆனால் மனிதர்கள் வற்றி விட்டார்கள். வீட்டுக்கு வீடு மின்சாரம் வந்து விட்டது. ஆனால் வெளியே கனத்த இருள சூழ்ந்திருக்கிறது.

நாம் மாறியிருக்கிறோம். ஆனால் வளர்ந்திருக்கிறோமா?

**– மாலன் [புதுமைப்பித்தனின் எக்ஸ்ரே கதையில்]**

பூமியை உப்பைப் போட்டு எவ்வளவு தூரம் கெடுக்க முடியுமோ அவ்வளவையும் கெடுத்து வைத்து விட்டு மாட்டு கலப்பையினால் இனி உழவே முடியாது என்கின்ற நிலை வரும் போது டிராக்டரைக் கொண்டு வந்து இறக்குகிறார்கள்... மண்ணின் இயற்கைத் தன்மையைக் கெடுத்து விட்டு டிராக்டரைக் கண்டுபிடித்தீர்கள். டிராக்டர் ஓடுவதற்கு எண்ணெய் வேண்டுமே அதற்காக பூமியில் சுரங்கம் தோண்டி வேறு ஒரு பகுதியைக் கெடுத்தீர்கள். இதற்கு தேவையான இரும்புச் சாமான்களைச் செய்வதற்காக காட்டினை அழித்தீர்கள். **– மசானோபு ஃபுகோகா**

விஞ்ஞானம் பேரழிவை உருவாக்கியது என்பதும் இயற்கையை அழித்தது என்பதும், பின்நவீனர்கள் சொல்வதைப் போல போக்குவரத்து தொழில்நுட்பம் 100 ஆண்டுகளில் 3000 ஆண்டுகளுக்கான அழிவை சாதித்துவிட்டது என்பதும் மறுக்க முடியாத உண்மை. இதை எந்த அளவிற்கு மறுக்கமுடியாதோ அதே அளவிற்கு இதற்கான மாற்று வாழ்தல் என்ன என்கிற கேள்வியும் உள்ளது. மாற்று வாழ்தல் என்பது இயற்கையோடு இணைந்து காலால் நடக்க முடிந்த எல்லைவரை நடந்து தொடர்புகொள்ளும் சிறுசூழல் அமைப்புகளில் மட்டுமே வாழ்வது. இது சாத்தியமா? என்கிற கேள்வி அர்த்தமற்றது. சாத்தியப்படுத்த முடியுமா? என்கிற கேள்வியும் அனர்த்தமானதே. காரணம் உலகம் உருவாகிவிட்டபின், அதற்கான குறியமைப்புகளில் இயங்கத் துவங்கியபின், மறுபடியும் புராதன வாழ்க்கை முறைக்கு செல்வது என்பது முற்றிலுமான மனப்பிறழ்ச்சிக்கு மொத்த சமூகமும் மாறி நினைவழிக்கப்பட்ட நிலையில் மட்டுமே சாத்தியம் என்று தோன்றுகிறது. **– ஜமாலன்**

நவீனத்துவம் உருவாக்கிய தனிமனிதன் குற்றம் மற்றும் குற்றம் பற்றிய உணர்வு, அதாவது குற்றஉணர்வு என்பதின்மேல் தான் கட்டப்பட்டு உள்ளான். இதன் பின்புலம் மேற்கத்திய கிறித்துவத்தின் பாவமன்னிப்பு கருதுகோளே. மனிதப் பிறப்பே பாவத்தில்தான் உருவாகிறது என்பதே அதன் அடிப்படை. இந்தியச் சமூகத்தில் பாவமன்னிப்பு இல்லை, பரிகாரம் உண்டு. பாவமன்னிப்பு தனிமனித உணர்வோடு சேர்ந்தது என்றால், பரிகாரம் அந்த அமைப்பின் விதிகளோடு சேர்ந்தது. பரிகாரத்தில் அமைப்பு உளவியலே முதன்மையானது. காந்தி இந்த பரிகாரவாதத்தை நீக்கி உண்மையின் முன் நிர்வாணமாக நிற்பது என்கிற தனிமனித உளவியலை முன்வைக்கிறார். இது இந்திய மனிதனின் நவீன மனசாட்சியாக உருவமைகிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு உண்மை உள்ளது, அதைக் கண்டுணர்வதே காந்தி முன்வைத்த சத்தியம்.

காந்தி குற்ற உணர்வையும் போதாமையையும் இந்தியச் சமூகத்தில் முன்வைத்தார். முற்றுப் பெற்றுவிட்டதான எண்ணத்தில் உள்ள, முழுமையடைந்துவிட்டதான மூடுண்ட ஒரு அமைப்பில் காந்திதான் குற்றஉணர்வு என்கிற மனப்புலத்தை அமைக்கிறார். இதுதான் தனிமனிதனை அவனது எல்லாவித அமைப்புப் பாதுகாப்பிலிருந்தும் விலக்கித் தனியனாக ஆக்கி அச்சம் கொள்ள வைக்கும் ஒன்று. அந்த அச்சத்தின் முன் கடவுளும் அருகதையற்றவனாகிவிடுவான். அந்தத் தனிமையில் உணர்வது உண்மை, சத்தியம் மட்டுமே. காந்தி இந்த மனப்புலத்தைத் தனது வாழ்தலின்மூலம் இந்தியச் சமூகத்தில் கட்டமைத்தவர் என்பதே முக்கியம். **– பிரேம்**

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## இராசதுரை ஜனகன்

யாழ். ஹாட்லிக் கல்லூரி

கலைப் பிரிவு -2AB

மாவட்ட நிலை : 10

தேசிய நிலை: 365



முயற்சித்தால் முடியாதது எதுவுமில்லை, நண்பர்களின் ஒத்துழைப்பும், ஆசிரியர்களின் வழிகாட்டலுமே இப்பெறுபேற்றிற்கு காரணமாகும்.

நான் தரம் புலமைப்பரிசில் பரட்சையில் 128 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண பரீட்சையில் 2ஏ பி 4சி 2 எஸ் பெறுபேற்றையுமே பெற்றேன். எனது தந்தை விவசாயம் சகோதரி ஆசிரியராக கடமையாற்றுகிறார்.

விருப்பமான துறைத்தெரிவு அவசியம். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடல் கல்வி பெரும் துணையாக அமையும் அந்தவகையில் நான் விளையாட்டுகளில் பங்குபற்றுவேன், நண்பர்களுடன் குழுவாக இணைந்து கற்பேன். ஆசிரியர்களின் சொற்கேட்டு பெற்றோரை மதித்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

## கேதீஸ்வரன் கிருஷாந்

யாழ். ஹாட்லிக் கல்லூரி

கலைப் பிரிவு -ABC

மாவட்ட நிலை : 102



தன்னம்பிக்கை, முயற்சி, இறை நம்பிக்கை, இருந்தால் நல்ல முறையில் வெற்றி பெறலாம்.

அந்தவகையில் நான் இப்பெறுபேற்றைப் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் இவ்வெற்றிக்கு காரணமான அதிபர் ஆசிரியர்கள் சகமாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.


நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை க.பொ.த சாதராண தரத்தில் 3 ஏ பீ 2 சீ 3எஸ் பெறுபேற்றையே பெற்றேன். எனது தந்தை வர்த்தகராகவுள்ளார். நான் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கின்றேன். விடாமுயற்சியுடன் கற்க வேண்டும் அன்றன்று படித்ததை மீட்டுக்கொள்ள வேண்டும். வகுப்புகளிற்கு ஒழுங்காக சென்றால் நிச்சயம் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெறலாம்.

## மகாலிங்கம் விஷ்ணுகுமரன்

யாழ். ஹாட்லிக் கல்லூரி

கலைப் பிரிவு -A2B

மாவட்ட நிலை : 54



கற்றலில் ஏற்படுகின்ற ஐயங்களை அன்றன்றே ஆசிரியரிடமும் நண்பரிடம் கேட்டு தெளிவாக்கிக் கொண்டால் பரீட்சையில் விடையளிப்பதற்கு இலகுவாக இருக்கும்.

அந்தவகையில் நான் இப்பெறுபேற்றைப் பெற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் முதல் தடவையாக தோற்றிய போது 2 சீ எஸ் பெறுபேற்றையே பெற்றேன். தொடர்ந்து விடாமுயற்சியு டன் படித்தே 2 ஆவது முறை இப்பெறுபேற்றை பெற்றேன். நான் சதுரங்க அணியில் தேசிய மட்டம் வரை பங்குபற்றியிருக்கின்றேன். கடந்த கால வினாத்தாள்கள் பல செய்வேன். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு எனது வெற்றிக்கு காரணமாகும்

## கஸ்தூரி மகாதேவா

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

கணிதப் பிரிவு -3A

மாவட்ட நிலை : 06

தேசிய நிலை : 28



தினமும் படிக்க வேண்டும். ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம். விருப்பத்துடன் கற்றால் வெற்றி பெறலாம்.

அந்தவகையில் நான் இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் எனது பெற்றோருக்கு நன்றி கூறுகிறேன்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண பரீட்சையில் 8ஏ பீ பெறுபேற்றையும் பெற்றேன். எனது தந்தையும் தாயும் ஆசிரியர்களாகவுள்ளனர்.

கணித, சமூக விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றுள்ளேன்.

தொகுப்பு : கணா நாதன்

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களின் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்கள் தமது சாதனை பதிவை தினமுரசில் வெளியிடவிரும்பினால் 0777193264, என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# போதை வர்த்தகர்களின் குகை
# அரசு மீது ஐ.தே.கட்சி கண்டனம்

(கொழும்பு)

இலங்கை இப்போது உலகப் போதைப் பொருள் மையமாக துரித கதியில் மாற்றமடைந்து வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சுமத்தியுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் சூதாட்டத்திற்கு ஊக்கமளிக்கும் அரசாங்கம் எவ்வாறு இளைஞர் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இளைஞர் விரக்தி என்ற சொல்லை அகராதியிலிருந்தே இல்லாதொழிக்கப் போவதாக ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தார். இதற்காக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மது பயன்பாடு மற்றும் சூதாட்டம் ஆகியன அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உலகில் அதிகளவில் மது அருந்தும் நாடுகளில் இலங்கை முன்னணி வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மதுப் பயன்பாடு 20 மில்லியன் லீற்றர் மதுபானம் அதிகளவில் நுகரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டில் 65 மில்லியன் லீற்றர் மதுபானம் அருந்தப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டில் 85 மில்லியன் லீற்றர் மதுபானம் அருந்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவா அரசாங்கத்தின் போதைக்கு முற்றுப்புள்ளி திட்டமா எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

வெகு விரைவில் உலகில் போதைப் பொருள் விநியோகம் செய்யப்படும் மிக முக்கியமான மையமாக இலங்கை மாற்றமடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். முக்கிய போதைப் பொருள் மையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளதாகவும், விரைவில் அது உலகின் முக்கிய வர்த்தக நிலையமாக மாற்றமடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கள்ளுத்தவறணையை அகற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஈவினை கிழக்கு இந்து மயானத்திற்கு அருகிலுள்ள கள்ளுத் தவறணையை அகற்றுமாறு இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். வலி.தெற்கு உடுவில் பிரதேசசபைத் தலைவர் தி.பிரகாஷிடம் கடந்த புதன்கிழமை இம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈவினை கிழக்கு இந்து மயானத்திற்கு அருகில் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக குறித்த கள்ளுத்தவறணை இயங்கி வருகின்றது.

தற்போது இப்பகுதியில் மீள்குடியேற்றம் அதிகரித்துள்ளமையால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கள்ளுத்தவறணை இயங்குவதனால் அப்பகுதி மக்கள் பல பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால், குறித்த கள்ளுத் தவறணையை அகற்றி வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுன்னாகம் வாசிக்கு பரிசாகக் கிடைத்தது கார்

(திருநெல்வேலி)

அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கார் பரிசாகக் கிடைத்துள்ளது.

பத்துக் கோடி பரிசுத்திட்டத்தின் ஹைவே ட்ரீம்ஸ் சீட்டிழுப்பிலேயே இராண்டாவது பரிசாக இக் கார் கிடைத்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட இச்சீட்டிழுப்பை அன்று இரவு தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த போது கார் தனக்குப் பரிசாகக் கிடைத்திருப்பதைக் இவர் அறிந்து கொண்டார்.

புதுவருடம் இவருக்கு அதிர்ஷ்டத்துடன் பிறந்துள்ளது. பரிசுக்குரிய இச்சீட்டினை இவர் சுன்னாகம், காங்கேசன்துறை வீதியில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் வைத்திலிங்கம் நடராசா என்பவரிடம் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பிரதேசத்தில் இதற்கு முன்னரும் அதிர்ஷ்ட சீட்டிலுப்பில் பலர் பரிசுகளைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (137)

# நிதி நிறுவனங்களை ஒன்றிணைக்க அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது இலங்கையில் காணப்படும் மொத்தம் 58 வங்கி சாராத நிதிசார் நிறுவனங்களை 20 பாரிய நிதி நிறுவனங்களாக ஒன்றிணைத்து குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாணய மாற்றுக் கொள்கை தொடர்பான வருடாந்த அறிக்கையை வெளியிட்டு கருத்து தெரிவிக்கையிலேயே. அவர் இந்த கருத்தை முன்வைத்திருந்தார்.

நிதிசார் கம்பனிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மற்றும் வங்கிகளுடன் இணைந்து ஒரு கம்பனியாக செயற்படுவதற்கு ஊக்குவிக்கப்படும்.

வெளி முதலீட்டாளர்கள் குறித்த நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக கவரப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப்டும் என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.2014 ஜூன் மாதமளவில் ஒரு குழுமத்தின் கீழ் ஒரு நிதிசார் நிறுவனத்தை மட்டுமே கொண்டிருக்க முடியுமென அஜித் நிவார்ட் கப்ரால் மேலும் தெரிவித்திருந்தார்.

# அனைவருக்கும் மின்சாரம் விசேட செயற்றிட்டம் விரைவில்

(கொழும்பு)

மின்சாரம் இல்லாத அனைத்து வீடுகளுக்கும் மின்சாரத்தை இந்த வருடத்தில் பெற்றுக் கொடுப்பதற்கான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பணித்துள்ளார்.

இலங்கை மின்சார சபைத்தலைவர் டபிள்யூ.பீ.கனேகல உள்ளிட்ட குழுவினருக்கு இந்தப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சாரம் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை துரித கதியில் செயற்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாகொடை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 5ஆம் ஆண்டு மாணவர்கள் வழங்கும்
"கலைநிகழ்ச்சி"
காலம் - 2012 தை 24ஆம் திகதி பி.ப.2 மணி
இடம் - கல்லூரி பிரதான மண்டபம்
ரிக்கற் - 50/-, 25/-, 10/-
(பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் 10/-)
மண்டப வாயிலிலும், ஸ்ரார் புத்தகசாலையிலும் ரிக்கற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்

36) அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு இடங்களைக் குறிப்பிடுக.
1) .................................... 2) ....................................

37) கலைநிகழ்ச்சி எப்போது நடைபெறவுள்ளது?
....................................

38) கலை நிகழ்ச்சிக்காக திருமதி பாலகுமார் நான்கு ஐம்பது ரூபா ரிக்கற்றுக்களையும், மூன்று பத்து ரூபா ரிக்கற்றுக்களையும் வாங்கினார். அவர் செலுத்திய பணம் எவ்வளவு?
....................................

39) நாகொடை இந்துக் கல்லூரி கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது. அக்கல்லூரி எந்த மாகாணத்தைச் சேர்ந்தது?
....................................

40) இக்கலை நிகழ்ச்சியை பா.அ.ச. ஒழுங்கு செய்தது. பா.அ.ச. என்ற சுருக்கக் குறிப்புகளை விரித்து எழுதுக.
....................................

41) இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து 150 மாணவிகள் கலை நிகழ்ச்சியைப் பார்க்க வந்தனர். அவர்கள் செலுத்திய பணம் எவ்வளவு?
....................................

42) கல்லூரி என்பதை ஆங்கிலத்தில் எழுதுக.
....................................

43) இக்கல்லூரி எந்த சமயப் பிரிவில் அடங்கும் என நீர் கருதுகிறீர்?
....................................

44) "வாயிலிலும்" என்ற சொல்லின் பன்மைச் சொல்லினை எழுதுக.
....................................

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

45) மாகாணக் கல்வி நிர்வாகத்திற்குப் பொறுப்பான அதிகாரி எவ்வாறு அழைக்கப்படுவார்?
1. கோட்டக்கல்விப் பணிப்பாளர்
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்
3. வலயக் கல்விப் பணிப்பாளர்

**பின்வரும் வாக்கியத்தில் நான்கு சொற்கள் எழுத்துப் பிழையாக உள்ளன. அச்சொற்கள் எவையெனக் கண்டு அவற்றைச் சரியாக எழுதுக.**

46) எமது கல்லூரி அதிபர் தலைமையில் புதிய முதலாம் தரமாணவர்கள் இரண்டாம் தரமாணவர்களால் வரவேற்க்கப்பட்ட சம்பவம் 8.1.1999 ஆம் திகதி நடைபெற்றது.

47) நெல், வேம்பு, பனை, தென்னை, பலா, இலுப்பை, வாழை, பப்பாசி, கமுகு, அரசு என்னும் தாவரங்களை ஆணிவேர் உள்ள தாவரங்கள், நாருருவேர் உள்ள தாவரங்கள் என வகைப்படுத்தி பின்வரும் அட்டவணையில் எழுதுக.

| ஆணிவேர் | நாருரு வேர் |
|---|---|
| | |



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



**பின்வரும் பந்தியை அவதானித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

நெருப்பு உருண்டை போலச் சூரியன் வானத்திலிருந்து பூமியைச் சுட வைக்கிறது. சூரிய ஒளிபட்ட முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன. காற்று வீசவில்லை. மலைகளில் ஊற்றுக்கள் வற்றிப் போகின்றன. ஆற்று நீர் குறைவடைகின்றது. ஆற்றின் அடியிலுள்ள கற்கள் ஒட்டகத்தின் முதுகைப் போன்று காட்சி தருகின்றன. பகலில் வெப்பத்தைத் தாங்க முடியாதுள்ளது. வியர்வை உடம்பை நனைக்கின்றது. நெருப்பினருகே இருப்பதைப் போன்று உள்ளது. வாவிகளோ வற்றி, வெடித்துக் காட்சி தருகின்றன.

01. மேலே கூறப்பட்ட சம்பவமானது பெரும்பாலும் எக்காலத்திற்குரியது?

02. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உலோகமொன்றின் பெயர் தருக.

03. இங்கு விலங்கினமொன்றின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன?

04. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலைகள் இரண்டின் பெயர் தருக.
1) .................................... 2) ....................................

05. மனிதனிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள் ஒன்றை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

06. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
1. பகலோன் :....................................
2. விண் :....................................
3. தேகம் :....................................
4. தீ :....................................


**பிரசினங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.**

07) பி.ப. 2.15 இற்குப் பயணத்தை ஆரம்பித்த தில்சான் மீண்டும் வீட்டுக்கு பி.ப. 5.10 இற்கு வந்தான். அவனது பயணத்திற்கு செலவிட்ட காலத்தைக் காண்க.
....................................

08) தொழுவத்தில் இருந்த 14 மாடுகளினதும், 6 ஆடுகளினதும் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?
....................................

**பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்
காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்
விரிந்த பரந்த வீதிகளும் , எழில் விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்
இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்



09) இப்பாடல் எதைப் பற்றிக் கூறுகின்றது? ..........................................

10) இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?..........................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொற்கள் தருக.**

11) பெரிய .................................... 12) நகரம் ....................................

13) தூர .................................... 14) பரந்த ....................................

**பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.**

15) கூ.மொ.வி.நி .................................... 18) இ.போ.ச ....................................

16) கி.பி. .................................... 19) இ.மி.ச. ....................................

17) இ.ரு.கூ. .................................... 20) மு.ப. ....................................

21) முன்னும் பின்னுமாக வரும் எண்களை எழுதுக.

.....................400804.........................

**பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

22) மயிலின.................................மனதைக் கவர்ந்தது. (அலகு, அழகு, அளகு)

23) வெடிச் சத்தம் கேட்டு மக்கள்..........................கொண்டு ஓடினார்கள் (கிளி, கிழி, கிலி)

**பின்வரும் கவிதையை வாசித்து 31 - 35 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

உடலைத் தூய்மை செய்வதால்
உயிரைப் பாதுகாக்கலாம்
திடமும் சுகமும் உள்ளவர்
தினமும் மகிழ்ச்சி கொள்ளுவர்


24) யார் தினமும் மகிழ்ச்சி கொள்ளுவர்? ..........................................

25) தினமும் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?..........................................

26) தூய்மை என்பதற்கு ஒத்த சொல் தருக..........................................

27) கொள்ளுவர் என்பதை இறந்த காலத்தில் எழுதுக..........................................

28) சுத்தம் பற்றி நீர் அறிந்த பழமொழிகள் இரண்டினை எழுதுக..........................................




மேலே தரப்பட்ட வரைபடத்தில் A, B, C, D, E, F ஆகிய நகரங்களுக்கான தூரங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றினை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடைதருக.

29) A நகரத்திலிருந்து B, E நகரங்களூடாக F நகரத்தை அடைவதற்குச் செல்ல வேண்டிய தூரம் யாது?

..........................................



30) A நகரத்திலிருந்து B நகரம் ஊடாக E நகரத்துக்குச் செல்லும் தூரத்திற்கும், A நகரத்திலிருந்து C நகரத்திற்குச் செல்லும் தூரத்திற்கும் இடையேயான வித்தியாசம் எவ்வளவு?

..........................................


31) கீழே தரப்பட்டவற்றைக் குறியீடுகளில் தருக.

1. சென்ரிமீற்றர் .................................... 2) லீற்றர் ....................................


3) மில்லிலீற்றர் .................................... 4) மில்லிமீற்றர் ....................................

5) கிராம் ....................................

**32) வித்தியாசமான உருவின் கீழ் கீறிடுக.**



**33) கண்ணாடியில் தோன்றும் கடிகார முகம் தரப் பட்டுள்ளது. சரியான நேரத்தைத் தெரிந்து கோடிடுக.**



1) 5.00
2) 7.00
3) 12.25

1) 10.30
2) 6.10
3) 1.30

1) 3.00
2) 9.00
3) 3.30

1) 6.05
2) 11.30
3) 6.00

34) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 01. Village | : ........................ | 02. Jungle | : ........................ |
| 03. Stones | : ........................ | 04. Train | : ........................ |
| 05. Nest | : ........................ | 06. Carpenter | : ........................ |
| 07. Mosque | : ........................ | 08.Rainbow | : ........................ |
| 09. Net ball | : ........................ | 10.Spoon | : ........................ |

35) பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 01. புதுவ | : ........................ | 02. தாத்தா | : ........................ |
| 03. பதுர | : ........................ | 04. கிரிபத் | : ........................ |
| 05. சுதுபாட்ட | : ........................ | 06. ரதுபாட்ட | : ........................ |

# மேய்ச்சல் தரவையாக மாறியது வலிகாமம் வடக்கு வயல்கள்

## கவலை தோய்ந்த முகத்துடன் விவசாயிகள்



பருவமழை பொய்த்ததன் காரணமாக வலிகாமம் வடக்கில் நெற் செய்கையில் ஈடுபடட விவசாயிகள் தற்போது இங்கு கால்நடைகளை மேயவிட்டுள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேசங்களில் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியே மக்கள் வாழ்கின்றனர். இந்த வகையில் சுமார் 500 குடும்பங்களுக்கு மேலாக நெற்பயிர் செய்கையை மேற்கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் மழையை நம்பியே நெற்பயிர் செய்கையை ஆரம்பித்தனர் ஆனால் யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் மழை பெய்யத் தவறிவிட்டது இதனால் விவசாயிகள் ஏமாற்றத்தை அடைந்துள்ளனர்.

பெரும்பாலும் வலி. வடக்கு விவசாயிகள் வங்கிகளில் கடனுதவி பெற்றே நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். மழை தன் கடமையை நிறைவேற்ற தவறியமையால் வங்கிகளுக்கு கடனை திரும்ப செலுத்த முடியாத நிலையும் விவசாயிகளின் மனதில் குடிகொண்டுள்ளது.

வலி. வடககு வயல்வெளிகளில் குறைநதளவு கிணறுகளே காணப்படுகின்றன. கிணறு இருப்பவர்கள் சிரமத்தின் மத்தியில் நெல் வயல்களுக்கு நீரை இறைத்தும் பயனின்றி காணப்படுகின்றனர். மழையின்மை காரணமாக கிணற்றிலும் நீர் காணப்படவில்லை குளங்களிலும் நீர் வற்றி விவசாயிகளின் கவலை தூண்டியுள்ளது.

வயல் வெளிகளில் நெற்களை விட களைகளின் இராஜ்சியமாக மாறிவிட்டது இதனால் விவசாயிகள் தமது கால்நடைகளை கவலையுடன் வயலில் உலாவர அனுமதித்துள்ளனர். கால்நடைகளும் தமது சுதந்திரத்தை தடையின்றி அனுபவித்து வருகின்றனர். (க)

# உணவகங்கள் மீதான பரிசோதனை காரணமின்றி நிறுத்தப்பட்டது ஏன்?

## விடை தெரியாத புதிர்

(திருநெல்வேலி)

யாழ்நகரப் பகுதியில் ஹோடடல்கள், உணவகங்கள், மருந்தகங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் சிலர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் திடீரென்று உயர் அதிகாரிகளிடமிருந்து வந்த உத்தரவின் பேரில் அது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவை இச் சோதனையின் போது நகர்ப்புறத்திலுள்ள பல உணவகங்கள், ஹோட்டல்கள், மருந்தகங்களில் பல சுகாதார சீர்கேடுகள் காணபபட்டு அவைகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதாரப் பரிசோதகர்கள் ஆயத்தமாக இருந்த வேளையில் உயர் அதிகாரிகளிடமிருந்து இந்த உத்தரவு கிடைத்ததாக தெரிகிறது.

கடந்த வியாழக்கிழமை காலை 7.30 மணியிலிருந்து முற்பகல் 11.00 மணிவரை இச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனை நிறுத்திக் கொள்ளுமாறு கிடைக்கப் பெற்ற உத்தரவுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. (137)

# போஷாக்குணவு விநியோகம்

(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேசசெயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழுள்ள கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்கு முத்திரைக்கான உணவுப் பொருட்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்பட்டு வருவதால் சம்பந்தப்பட்ட பயனாளிகள் உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (08)

# மாணவர் அனுமதி பிரச்சினைக்கு தீர்வு கண்டது விக்ரோறியாக் கல்லூரி

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தரம் 6 மாணவர்களுக்கான அனுமதியில் நிலவி வந்த பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இப் பாடசாலையில் தரம் 6 இற்கான அனுமதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும் என பாடசாலை நிர்வாகம் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதைவிட இப் பாடசாலைகளின் ஊட்டப் பாடசாலைகளான சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, திருவடிநிலை சைவத்தமிழ் வித்தியாசாலை, காட்டுப்புலம் அ.மி.த.க பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்கள் தரம் 6 இற்கு இணைவதற்கு இப்பாடசாலை ஒன்றே இப்பிரதேசத்தில் உள்ளதால் கல்லூரி அதிபரின் வரையறையை ஏற்றுக்கொள்ள முடியாது என பெற்றோர் தெரிவித்தனர்.

எனினும் கல்லூரி நிர்வாகம் அனுமதி வழங்கமறுத்ததை அடுத்து பெற்றோர் இவ் விடயம் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, வடமாகாண கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டுவந்தனர்.

அத்துடன் நேற்று முனதினம் வெள்ளிக்கிழமை அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் திரண்டு கல்லூரிக்கு முன்னால் ஒன்று கூடினர். இதனையடுத்து உடனடியாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.கஜதீபன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஆகியோர் வருகைதந்து அதிபருடன் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் கல்லூரி அதிபர் தரம் 6 அனுமதியில் 5 பிரிவுகள் உள்ளதுடன் ஒவ்வொரு பிரிவிலும் 35 மாணவர்களை உள்ளடக்கும் வகையில் 70 புள்ளிகளுக்கு குறைந்த மாணவர்களையும் அனுமதிப்பதாக உறுதியளித்தார். இதனால் இப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு இப்போது கிடைத்துள்ளது. (கி)

# சுற்றுலாத் தளமாக மாறிவரும் நெடுந்தீவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு பகுதியானது தற்போது வெளியிடங்களில் இருந்துவரும் சுற்றுலாப்பயணிகளின் தளமாக மாறிவருகின்றது.

வெளிநாட்டவர்கள் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. இங்கு காணப்படும் ஒல்லாந்தர் கோட்டை, பெருக்குமரம், குதிரைகள், குதிரைலயம், புறாக்கூடு, கல்வேலி போன்றவற்றை அதிகமாக பார்வையிட்டுச் செல்கின்றனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்து மக்களின் வருகையும் அதிகரித்து வருகின்றது. (ர)

# மழைவேண்டி இறைவழிபாடு

(மல்லாவி)

மல்லாவி பிரதேசத்திலுள்ள விவசாயிகள் மழையை வேண்டி இறைவழிபாட்டை மேற்கொண்டுள்ளனர். மல்லாவியிலுள்ள திருநகர் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் கடந்த புதன்கிழமை 1008 இளநீர் கொண்ட நீராலான அபிஷேகம் இடம்பெற்றது.

இம்முறை காலநிலை மாற்றத்தால் மழை பொய்த்துள்ளது. இதனால் நெற்செய்கை பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்கும் வகையில் விவசாயிகளும் கமக்கார அமைப்புக்களும் இணைந்து மழையை வேண்டி இறைவழிபாட்டை மேற்கொண்டுள்ளனர். (140)

# புனரமைக்கப்படாத நிலையில் மாகியப்பிட்டி புத்தூர் சந்தி வீதி



மாகியப்பிட்டி சந்தியில் இருந்து சுன்னாகம் ஊடான புத்தூர் சந்தி வரையான பிரதான வீதி இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் மற்றும் வேறு தொழில்களுக்குச் செல்வோர் எனப் பலர் நாளாந்தம் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மாகியப்பிட்டி, அளவெட்டி, கந்தரோடை, சுன்னாகம், ஊரெழு, அச்சுவேலி, புன்னாலைக்கட்டுவன், நிலாவரை, புத்தூர் ஆகிய பிரதேசங்களுக்கு ஊடாகச்செல்கின்ற பிரதான வீதியாகவும் இவ் வீதி அமைந்துள்ளது. வீதியால் அவசரவேளைகளிலும் மற்றும் இரவு வேளைகளிலும் விரைவாகவும் பாதுகாப்பாகவும் பயணஞ்செய்ய முடியாதநிலை காணப்படுகின்றது. இதேவேளை இவ் வீதியுள்ள சிறிய பாலங்கள் திருத்தப்படாத நிலையிலும் வீதியின் நடுவே உடைந்தும் காணப்படுகின்றது.

எனவே மக்களின் போக்குவரத்து தேவையை கருத்தில் கொண்டு இப் பிரதான வீதியினை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் வேண்டிநிற்கின்றனர். (க)

# அடிப்படை வசதிகளின்றி கணேசபுரம் மக்கள்

மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம், கணேசபுரம் சேவா கிராமம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்வதுடன் வாழ்வாதார நெருக்கடிகளையும் சந்தித்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் கணேசபுரம் கிராமத்தில் 300 வரையான குடும்பங்களும், சேவா கிராமத்தில் 38 வரையான குடும்பங்களும் தற்போது மீள்குடியேறி வாழ்ந்துவருகின்றன.

இந் நிலையில், இக்கிராமத்தின் குடியிருப்பு வீதிகள் எவையும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதுடன் போதிய போக்குவரத்து வசதிகள் இன்றியும் காணப்படுகின்றது.

இதனால், இக்கிராமத்தில் உள்ளபாடசாலை மாணவர்கள் கிராமத்தில் இருந்து சுமார் நான்கு அல்லது ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள வெள்ளாங்குளம் பாடசாலைக்கு கால்நடையாகச் சென்று மாலையில் வீடுகளுக்குத் திரும்ப வேண்டிய நிலை காணப்படுகின்றது.


அத்துடன் ஒவ்வொரு குடும்பமும் குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகளையும் பெற்றுக் கொள்வதற்கு தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் எந்தவிதமான தொழில்களையும் மேற்கொள்ள முடியாத நில்லை காணப்படுவதனால் இங்குள்ள மக்கள் தமது வாழ்வாதார தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் அடிப்படை பொருளாதார வசதிகள் இன்றியும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வசதியீனங்களால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மத்திய கிழக்கு நாடுகளை எச்சரிக்கும்

# இஸ்ரேலின் "கொல்லும் வண்டிகள்" ஏவுகணை





ஈரான், சிரியா மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளிடமிருந்து தங்களுக்கு அச்சுறுத்தல்கள் இருந்து வரும் நிலையில் அந்நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஆதரவுடன் தற்காப்பு நடவடிக்கைககளை இஸ்ரேல் எடுத்து வருகிறது. இந்நிலையில் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணையை தடுத்தழிக்கும் அம்பை இஸ்ரேல் சோதனை செய்து வருகிறது.


கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் நடத்தப்பட்ட சோதனை 90 சதவீதம் வெற்றியடைந்தது. இதையடுத்து நேற்று இரண்டாவது முறையாக தனது மேம்படுத்தப்பட்ட அம்பை எய்து வெற்றிகரமாக இஸ்ரேல் சோதனை செய்துள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியின் மேல் பறந்து சென்ற இந்த அம்பு, வெற்றிகரமாக இலக்கை எட்டியதாக இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பு துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சோதனை முயற்சியை நடத்தும்போது அமெரிக்க அதிகாரிகள் கலந்து கொண்டதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை தலைமை அதிகாரி யேர் ரமடி தெரிவித்துள்ளார்.

தாக்க வரும் ஏவுகணைகளை பூமியின் வளிமண்டலத்தின் மேலேயே தடுத்தி நிறுத்தி அழிக்கும் இந்த ஏவுகணைக்கு "கொல்லும் வண்டிகள்" என பெயரிடப்பட்டுள்ளது. இரசாயன மற்றும் அணு ஆயுதங்களைக் கொண்ட ஏவுகணை தாக்க முனையும் போது தடுத்தழிக்கும் முயற்சியிலேயே இந்தச் சோதனையை இஸ்ரேல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஈரான் மற்றும் சிரியாவிடம் இதுபோன்ற நீண்ட ஏவுகணைகள் உள்ளதாகவும், மேலும் ஹிஸ்புல்லா அமைப்பிடமும் இத்தகைய ஏவுகணைகள் உள்ளதாகவும் இஸ்ரேல் உறுதியாக நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவின் ரொக்கட் இன்று விண்ணில் பாய்கிறது



இந்தியாவில் ஜி.எஸ்.எல்.வி-டி5 ரொக்கெட் இன்று விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

இந்திய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் இயந்திரம் பொருத்தப்பட்ட ஜி.எஸ்.எல்.வி-டி5 ரொக்கெட், கடந்த ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட இருந்தது. அந்த ரொக்கெட்டில் ஜி-சாட் 14 என்ற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை அனுப்ப இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டு இருந்தனர். ஆனால், கடைசி நேரத்தில் ரொக்கெட்டின் 2ஆவது நிலை இயந்திரம் திரவ எரிபொருள் கசிவு கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் ரொக்கெட்டை விண்ணில் செலுத்தும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜி.எஸ்.எல்.வி-டி5 ரொக்கெட் மூலம் ஜிசாட் செயற்கைக்கோள், இன்று விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் இராதாகிருஷ்ணன் அறிவித்தார். அதன்படி, இன்று மாலை 4.18 மணிக்கு ஜி.எஸ்.எல்.வி-டி5 ரொக்கெட், சிறிஹரிகோற்றாவில் உள்ள சதீஷதவன் விண்வெளி மையத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

# இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப்போராட்டம்




தமிழ்நாடு இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடடுள்ளனர்.

கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த பாம்பனைச் சேர்ந்த 18 நாட்டுப் படகு மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த சம்பவத்தை கண்டித்து இராமேஸ்வரம் மற்றும் பாம்பன நாட்டுப் படகு மீனவர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். இதனால் படகுகள் ஆழம் குறைந்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

600 படகுகளில் கறுப்புக்கொடி கட்டி போராட்டத்தில் குதித்தனர். படகுகள் அனைத்தும் கடற்கரை ஓரம் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மீனவர்களின் விசைப்படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பாம்பனில் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியுள்ளனர்.

# பிரதமராகும் அனைத்து தகுதியும் ராகுல் காந்திக்கு உண்டு



ராகுலுக்கு பிரதமராக அனைத்து தகுதியும் உண்டு என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் டில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது. அப்போது புதிய பிரதமரிடம் எனது பொறுப்புகளை ஒப்படைத்துவிடுவேன். புதிய பிரதமர் ஐக்கிய முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். புதிய தலைமுறையே நாட்டை வெற்றிகரமாக வழிநடத்தும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும் நான் பிரதமர் பதவிப்போட்டியில இல்லை என்பதை எப்போதோ தெளிவுபடுத்தி விட்டேன். மீண்டும் பிரதமராகும் எண்ணமில்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியே பிரதமரைத் தேர்ந்தெடுக்கும்.

இந்தியாவின் பிரதமராக ராகுல் காந்திக்கு அனைத்து தகுதியும் உள்ளது. ஆனால், அந்த முடிவை தக்க நேரம் வாய்க்கும் போது, காங்கிரஸ் கட்சி எடுக்கும். நாட்டை இளைய தலைமுறையினர் வழி நடத்துவார்கள். பிரதமரான புதிதில் நான் எப்படி இருந்தேனோ அப்படித்தான் இன்றும் இருக்கிறேன். என்றும் மக்களுக்கு சேவை செய்வதே என் எண்ணமாக இருநதிருக்கிறது. எனது பதவியை நான் துஷ்பிரயோகம் செய்ததில்லை.

எனது ஆட்சிக் காலத்தில் நான் ஒருபோதும் பதவி விலக நினைத்தது இல்லை. என்னுடைய பணியை நான் விருப்பத்துடனும் உண்மையுடனும் மேற்கொண்டு வருகிறேன். எனது பதவியைப் பயன்படுத்தி எனது நண்பர்களுக்கோ உறவினர்களுக்கோ எவ்வித ஆதாயத்தையும் அளிக்கவில்லை. என்றார்.

# அமெரிக்காவில் பனிப்புயல் 9பேர் உயிரிழப்பு

அமெரிக்காவை அச்சுறுத்தும் பனிப்புயல் காரணமாக ஒன்பது பேர் பலியாகியுள்ளனர்.

வடகிழக்கு அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பனிப்புயலின் காரணமாக அங்குள்ள மக்கள் வீடுகளில் முடங்கிப்போயுள்ளனர்.

இந்நிலையில் அங்கு 2 அடி உயரத்திற்கு பனி படர்ந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க விமான நிறுவனங்கள் நாடு முழுவதும் பயணிக்கும் 2300 விமானங்களை இரத்துச் செய்துள்ளன. வர்த்தக மற்றும் பாடசாலை கட்டடங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

உலகச் செய்திகள்

# வடகொரிய ஜனாதிபதியின் கோர முகம் மரணித்து விட்டதா மனிதாபிமானம்?



120 நாய்களை கொண்டு தனது மாமாவை ஆடையின்றி கடித்துக்குதற வைத்து கொன்ற வடகொரிய ஜனாதிபதியின் கோரமுகம் தொடர்பான செய்திகள் தற்போது ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் யுன்னின் மாமாவான ஜாங் சாங் தேக் (வயது-67), என்பவர் அந்நாட்டு அரசில் அதிபருக்கு அடுத்தபடியாக 2-ஆவது இடத்தில் அதிகாரம் மிக்கவராக செயற்பட்டார்.

இந்த நிலையில் இவர் இராணுவ புரட்சி மூலம் அதிபர் கிம் ஜாங் யுன்னிடம் இருந்து ஆட்சியை கைப்பற்ற சதித் திட்டம் தீட்டினார். இதை அறிந்த அதிபர் அவரையும், அவரது உதவியாளர்கள் 5 பேரையும் கைது செய்தார். அவர்கள் மீது இராணுவ நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்தது. அதில் ஜாங் மற்றும் அவரது உதவியாளர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜாங் சாங் தேக் மற்றும் உதவியாளர்கள் 5 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் துரோகி, வெறுக்கத்தக்க அழுக்கான நபர், நாயை விட கேவலமானவர் என்று கொரிய செய்தி நிறுவனங்கள் வர்ணித்திருந்தன. முன்னதாக அவர் தூக்கிலிடப்பட்டதாக தகவல்கள் தெரிவித்த நிலையில், அவரது தண்டனை நிறைவேற்றப்பட்ட விதம் குறித்து சீனாவைச் சேர்ந்த செய்தி நிறுவனம் மிகவும் அதிர்ச்சிகரமான தகவலை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

120 நாய்களை மூன்று நாட்களுக்கு உணவு கொடுக்காமல் பட்டினி போட்டு வைத்திருந்ததாகவும், அதன் பின் ஜாங் சாங் தேக் மற்றும் அவரது உதவியாளர்களின் ஆடைகளை களைந்து அந்நாய்களிடம் விடப்பட்டதாகவும், அந்த 120 நாய்களும் 6 பேரையும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கடித்து குதறி கொன்றதை வட கொரிய அதிபர் 100இற்கும் மேற்பட்ட அதிகாரிகளுடன் அமர்ந்து நேரடியாக பார்த்து இரசித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. நினைத்து பார்கக முடியாத அளவிற்கு கோரமான முறையில் ஜாங் சாங் தேக் மற்றும் ஐந்து உதவியாளர்களுக்கும் நிறைவேற்றப்பட்ட தண்டனை அந்நாட்டு அதிபரின் மிக கோரமான முகத்தை காட்டுவதாக அச்செய்தி நிறுவனங்கள் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

# போலியான "பேஸ்புக்" கணக்குகள் நடிகர் சூரி பொலிஸில் புகார்



தன்னுடைய பெயரில் போலி பேஸ்புக் கணக்குத் தொடங்கி விஷமிகள் சிலர் தன் பெயருக்கு களங்கம் விளைவிக்க முயற்சிப்பதாக சென்னை பொலிஸ் அலுவலகத்தில் நகைச்சுவை நடிகர் பரோட்டா சூரி புகார் அளித்துள்ளார். வெண்ணிலா கபடி குழு படத்தின் மூலம் பிரபலமாகி பல படங்களில் நகைச்சுவை வேடத்தில் நடித்து வருபவர் பரோட்டா சூரி.

இவர் சென்னை பொலிஸ் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஒரு பரபரப்பான புகார் மனு கொடுத்துள்ளார்.

அதில், தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து வரும்நான் பொதுமக்கள் மத்தியிலும், இரசிகர்கள் மத்தியிலும மிகுந்த மரியாதையுடன் விளங்கி வருகிறேன். பொது விவகாரங்களில் தலையிடுவதோ அல்லது எதைப் பற்றியும் கருத்து சொல்வதோ கிடையாது. ஆனால் சமீபத்தில் நடிகர் ரஜினிகாந்த் பற்றி அவதூறாக பேசியிருப்பதாக கூறி சில பத்திரிகையாளர்கள் என்னிடம் கருத்து கேட்டார்கள்.

மேலும் டுவிட்டர், பேஸ்புக்கில் பங்கேற்கும் அளவுக்கு நான் படித்தவன் இல்லை. ஆனால் எனது பெயரில் 3 பேஸ்புக் கணக்குகள் தொடங்கி எனக்கு எதிரான மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளன என்றும் எனது பெயரிலான பேஸ்புக் கணக்குகளை முடக்கி வைக்கவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

# விடத்தல்தீவு கடற்கரையோரம் அத்துமீறும் இந்திய இழுவைப்படகுகள்

## - தடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை -

மன்னார், விடத்தல்தீவு கடற்பகுதியில் இந்திய றோலர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விடத்தல்தீவிலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் சனி, திங்கள், புதன்கிழமைகளில் இவ்வாறு அத்துமீறி இந்திய றோலர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதாக அதிகாரிகளிடம் முறையிடப்பட்ட பொழுதிலும் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இந்திய றோலர்கள் அதிகம் வரும் இம்மூன்று நாட்களிலும் கேரளாக் கஞ்சா அதிகளவில் இப்பகுதிகளில் கைமாற்றப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெறும் அத்துமீறிய றோலர்களால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விடத்தல்தீவு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (113)

# முதிரை மரங்களுடன் மாட்டியது டிப்பர்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் காட்டுப் பகுதியிலிருந்து சுமார் 2 இலட்சம் பெறுமதியான முதிரை மரங்களை டிப்பர் வாகனத்தின் மூலம் யாழ்ப்பாணத்திற்கு கடத்திய நபர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்த புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்படி டிப்பர் வாகனத்தினை சோதனை செய்தபோதே, இவ்வாறு சட்டவிரோதமாக காட்டு மரங்கள் கடத்தி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டது.

மரக்குற்றிகளுடனான டிப்பர் வாகனம் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நிதி விடயங்களை கண்காணிக்க வலியுறுத்து

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிதி விடயங்களில் பல முரணான நிலை காணப்படுவதனால் மக்கள் கண்காணிக்க வேண்டும் என சபையின் உபதலைவர் எஸ். தணிகாசலம் தெரிவித்தார்.கனகராயன்குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லையினுள் பல வியாபார நிலையங்கள் முறையான அனுமதி இன்றி அமைக்கப்பட்டுள்ளதால் பிரதேசசபை நிர்வாகம் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

யுத்த முடிவுக்கு பின்னர் 2011 பதவியேற்ற பிரதேசசபையில் கணிசமான உள்ளக வரிவருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வழிவகைகள் அற்ற நிலையில் எதுவித மக்கள் நலன் சார்ந்த திட்டங்களையும் செயற்படுத்த முடியாத நிலையில் இருந்து வருவது எல்லோரும் அறிந்ததே என்றார்.

# மீனவர்களுக்கு விளக்கமறியல்

(ராமநாதபுரம்)

இந்திய கடல் எல்லையில் வைத்து கடந்த செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 59 பேருக்குமான விளக்கமறியல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தமிழ்நாடு, ராமநாதபுரம் பிரதான நீதிமன்றத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு கற்பிட்டி பொலிஸாரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேரையும் எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிமன்ற பதில் நீதவான் பலால் அபுத்தாஹிர் நேற்று உத்தரவிட்டார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த மீனவர்கள கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன், மீனவர்களின் படகுகளினை கற்பிட்டி கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறும் பதில் நீதவான் உத்தரவிட்டார்.

சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மன்னார் மற்றும் கற்பிட்டி கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 26 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இராணுவத்...

ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதை நாம் வெளிப்படையாகவே தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

அத்தோடு வலிவடக்கில் 6800 வரையான ஏக்கர் நிலங்களை இராணுவத்தினர் சுவீகரிக்க முனைவதையும் நாம் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவருகின்றோம். அதாவது மக்களின் காணிகளை இராணுவத்தினர் இராணுவத் தேவைகளுக்காகவும் சுவீகரிப்பதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

இதுதொடர்பாக நான் நாடாளுமன்றில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் குழுநிலை விவாதத்தின்போதும் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆனால் அபிவிருத்தி தேவைகளுக்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை அவ்வாறான நடவடிக்கைகள் தென்பகுதியிலும் மற்றும் உலகின் எப்பாகத்திலும் இயல்பாக நடைபெறும் விடயம் ஆனால் அபிவிருத்தி என்பது வேறு, இராணுவத்தேவை என்பது வேறு, எனவே வலிவடக்கிலே குறிப்பிடப்படும் 1800 ஏக்கர் நிலங்களும் இராணுவத்தேவைக்காக சுவீகரிக்கப்பட்டு இராணுவ முகாம்களை அமைப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்தோடு வளலாய் கிராமத்தில் இராணுவத்தினர் விடுவிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த பகுதியை நாங்கள் சென்று பார்வையிட்டோம். அங்கு பற்றைக்காடுகள் அழிக்கப்பட்டு மக்களை மீள் குடியேற்றுவதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அங்கு சொந்தக்காணிகளை கொண்ட மக்களை குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு முகாம்களில் வாழ்கின்றவர்களில் இதுவரை சொந்தமாக காணிகளின்றி வாழ்கின்ற மக்களுக்கும் காணிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 13 ஆயிரம்...

யுத்தம் நிறைவுக்கு வந்திருந்த நிலையில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி நான் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்டேன். அந்தச் சூழ்நிலையில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னால் இயன்ற வரை இராணுவ ஆளணியினரைப் பயன்படத்தி திட்டங்கள் வகுத்து செயற்பட்டேன். இதில் படையினரால் 1888 வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் இந்திய வீட்டுத்திட்ட நிதியோ வேறு அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்போ இல்லாது கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்கான குருதிக்கொடை, மருத்துவ சிகிச்சைகள் குறிப்பாக இருதய சிகிச்சை இத்திட்டத்தின் மூலம் மூவருக்கு வெற்றிகரமாக பல இலட்சம் ரூபா செலவில் சிகிச்சை வழங்கப்பட்டு அவர்கள் நல்ல நிலையில் உள்ளனர்.

இவ்வாறு இருவழிகளில் அதாவது தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் உறவுப்பாலத்தை கட்டியெழுப்பவும் சமூகநலத் திட்டங்கள் மூலமாகவும் யுத்தப்பாதிப்பில் இருந்த மக்களுக்கு என்னாலான பணியைச் செய்யமுடிந்துள்ளது. இன்னமும் யாழ். குடாநாட்டு மக்களின் சில பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ளது.

இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்களது காணிகள் நாளாந்தம் அவர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றன. வரணியில் உள்ள படைமுகாம் அகற்றப்பட்டு இவ்வாறு பொதுமக்களிடம் காணிகள் ஒப்படைக்கப்படுகிறது.

எமக்கிடையே முரண்பாடுகள் தோன்றி மீண்டும் யுத்தம் உருவாகினால் தற்போது ஏற்பட்டதைவிட மோசமான அழிவுகளே வந்து சேரும். இதில் பாதிக்கப்படுவது தென்பகுதியும்தான்.

எனவே ஐக்கிய இலங்கைக்குள் நாம் ஒற்றுமையாக வாழவேண்டிய தேவை உள்ளது. இதன்னை அடியொற்றி எதிர்வரும் காலத்தில் தமிழ்த் தலைமை சிந்தித்து செயற்படவேண்டும் என்றும் அவர் இந்த பிரியாவிடை நிகழ்வில் கேட்டுக்கொண்டார். (பா)

## மத்திய...

உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக்குடனேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த மூன்று நாடுகளுக்குமான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

முதலில் ஜோர்தான் செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அங்கு அந்நாட்டு மன்னர் அப்துல்லா அல் ஹுசேனுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இதனையடுத்து, இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டு பலஸ்தீனம் செல்லும் அவர், அங்கு ஜனாதிபதி மொகமட் அப்பாஸைச் சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளார்.

இறுதியாக ஸ்ரேலுக்குச் செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்நாட்டுப் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு மற்றும் ஜனாதிபதி ஷிமொன் பெரஸையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## சுயலாப...

போது தமிழக அரசியல் கட்சியொன்றுடன் காங்கிரஸ் கூட்டணி சேரும் எனவும், யாருடன் சேர்வது என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தல் காலத்தில் பிழையான தீர்மானங்களை எடுப்பதனை வழமையாகக் கொண்டது எனவும், அதன் அடிப்படையில் தற்போது பாரதிய ஜனதா கட்சியுடன் வை.கோ கூட்டணி சேரத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மன்னார்...

டி.எல்.வைத்தியரட்ன முன்னிலையில் நேற்றும் காலை 8 மணிமுதல் மாலை 2.15 மணி வரைக்கும் மனித புதைகுழி தோண்டப்பட்ட போது 3 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இதே வேளை குறித்த புதைகுழியினுள் இருந்து மனித பற்கள் சில மீட்கப்பட்டுள்ளதோடு குறித்த் பற்கள் சுமார் 6 வயதுடைய சிறுவர்களுடையதாக இருக்கலாம் என அதிகாரிகள் ஊகிக்கின்றனர்.

குறித்த மனித புதைகுழி தோண்டும் பணி மீண்டும் நாளை இடம்பெறவுள்ளது.

# ஆட்டுத் திருடன் வசமாக மாட்டினான்

(வடமராட்சி)

கொற்றாவத்தையில் பொலிஸாரிடம் வசமாக மாட்டிய ஆட்டுத்திருடனை பருத்தித்துறை நீதவான் 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

அண்மையில் திக்கம் கடற்கரையில் திருடிய நல்ல இனமறி ஆட்டை திருடன் தேவரையாளி பகுதியால் கொண்டு சென்ற வேளையில் பொலிஸாரைக் கண்டு திருடிய ஆட்டை விட்டுவிட்டுத் தப்பிச்சென்று விட்டான். ஆட்டைக் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர் பொலிஸார்.

கடந்த வியாழனன்று பிரஸ்தாப திருடன் கொற்றாவத்தைப் பகுதியில் பொலிஸாரிடம் வசமாக மாட்டினான்.

திக்கம் கடற்கரையில் திருடப்பட்ட ஆட்டின் உரிமையாளர் யார் என்பது தெரியாத நிலையில் பொலிஸ் நிலையத்தில் ஆடு கட்டப்பட்டுள்ள நிலையில் உரிமையாளர் அடையாளம் காட்டி ஆட்டைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்தனர். (116)

## போர்க்குற்ற...

இதன் போது பொறுப்புக்கூறல் மற் றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவர் பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த இவர், இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, தண்டனை விதிக்கப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என கடந்த வருட நடுப்பகுதியில் இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியின் போது இவர் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முடிவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் இச்செவ்வியின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது ஏற்கனவே இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் இச்செவ்வியின் போது அவர் அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஸ்டீபன் ராப் மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான திட்டமே திவிநெகும

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க



(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான அரசாங்கத்தின் வேலைத் திட்டமாகவே திவிநெகும திணைக் களம் அமைக்கப்பட்டு வருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசியல் அதிகாரத்தை மத்தியில் குவித்துக்கொள்ளும் அரசின் திட்டமே இந்த திவிநெகும சட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பி.பி.சி.யிடம் தெரிவித்தார்.

ஓரிரு நபர்கள் தங்களின் அதிகாரப் பிடியை இறுக்கிக் கொள்வதற்கு எடுத்த அரசியல் முடிவுதான் இது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம் இந்த சட்டத்தின் ஊடாக அரசியல் எதேச்சாதிகாரத்தை குவித்துக்கொள்ளவே முயன்றுள்ளது.

மாகாணசபைகளிடம் இருந்த பல அதிகாரங்கள் இந்த சட்டத்தின் ஊடாக திருடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறும் அரசாங்கத்தின் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் நேற்று முன்தினம் முதல் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "திவிநெகும" திட்டத்தின்மூலம் 50 இலட்சம் மக்கள் பயனடைவு

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

'திவிநெகும' சட்டத்தின்மூலம் 18 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 50 இலட்சம் மக்கள் நன்மையடைவரெனவும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனால் அதிகாரம் மத்தியில் குவித்துக்கொள்ளப்படுமெனக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களனத்தின் மூலம் உண்மையில் எனது அதிகாரமே குறைக்கப்படுகின்றது.

இந்தத் திணைக்களம் அரச



சேவை ஆணைக்குழுவின் கீழேயே வருவதால் அதன் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டே செயற்படவேண்டும்.

எனவே அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான அரசாங்கத்தின் வேலைத்திட்டமாக இதனைப் பாரக்க்கக்கூடாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வலுப்பெறுகிறது தாழமுக்கம் வடக்கு, கிழக்கில் பலத்த மழை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு கடற் பிரதேசங்களில் கொந்தளிப்புடனான காற்று வீசக் கூடும் என காலநிலை அவதான திணைக் களம் எதிர்வு கூறியுள்ளது.

திருகோணமலைக்கு அப்பால 250 கிலோமீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் வலுப்பெற்று வருவதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, மன்னார் முதல் பொத்துவில், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் இடியுடனான கடும் மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடபகுதியிலிருந்து கிழக்கு நோக்கி வீசும் காற்று மணிக்கு



முப்பது முதல் ஐம்பது கிலோ மீற்றர் வரை அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, காலி, மற்றும் புத்தளம் ஊடாக கொழும்பு வரையிலும், கரையோர கடற் பிராந்தியத்தில் இந்த நிலை நீடிக்கும் என மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# ஹெரோயின் கொள்கலன் பிரதமரின் மகனிடம் விசாரணை


(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரட்னவின் மகன் அனுராத ஜயரட்னவிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

அண்மையில் மீட்கப்பட்ட பாரியளவிலான ஹெரோயின் அடங்கிய கொள்கலன் தொடர்பிலேயே விசாரணை நடத்தப்பட்டுள்ளது,

இரண்டரை மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் இந்த விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

அனுராத ஜயரட்னவின் தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையதாக குற்றம் சுமத்தப்படும் பாகிஸ்தானியர் பணம்



வழங்கியதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதேவேளை, போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் பிரதமருடன் இருந்து புகைப்படம எடுத்துக் கொண்டமை தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட உள்ளது.

ஹெரோயின் கொள்கலனை விடுவிப்பதற்கு கடிதம் அனுப்பி வைத்தமை தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பேருந்து மீது கல்வீச்சு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து மீது இக்கிரிக்கொல்லாவையில் வைத்து நேற்றுமுன்தினமிரவு கல்வீச்சுத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் சாரதியான அல்வாயைச சேர்ந்த எஸ்.யோகராஜா (45) காயமடைந்துள்ளார்.

கல்வீச்சுத் தாக்குதலினால் பேருந்தின் முன்பக்க கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளதுடன் சாரதிக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள சாரதி முதலுதவியினை செய்துவிட்டு, பயணிகளுடன் பருத்தித்துறையை நேற்றுக்காலை வந்தடைந்தார்.

யாழ்.கொழும்பு பேருந்துகள் மீது மதவாச்சி பிரதேசங்களில் வைத்து அண்மைகாலமாக பரவலாக கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (116)

## மாணவர் படையணியைச் சேர்ந்த

# தெல்.யூனியன் கல்லூரி மாணவி பயிற்சிக்காக பங்களாதேஷிற்கு



இலங்கையின் மாணவர் படையணியின் பெண்களுக்கான மாணவர் படையணியில் இருந்து பங்களாதேசிக்கு பயிற்சிக்காக சென்ற மாணவர் படையணிக் குழுவில் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி மாணவி சஸ்மிதா ஜெகதீஸ்வரன் இடம் பெற்று கடந்தவாரம் பயிற்சியினை நிறைவு செய்துள்ளார்..

இலங்கையில் மாணவர் படையணியுள்ள 45 பாடசாலைகளில் இருந்து 10 மாணவர்கள் இப்பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டனர் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒரேயொரு தமிழ் மாணவியாக இவர் காணப்படுகின்றார் பங்களாதேசிற்கான மாணவர் படையணி பயிற்சியின் போது பங்களாதேசத்தின் பிரத மந்திரி கடற்படைப் மாணவர் படையணி உறுப்பினர்கள் ஆகியோரை இவர் சந்தித்துள்ளார்.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டமை தொடர்பாக சஸ்மிதா கருத்து தெரிவிக்கும்போது மாணவர் படையணியின் பயிற்சியானது நன்மையளித்ததுடன் தலைமைத்துவ ஆற்றல் பயம், கூச்சம் அற்ற நிலை விடயங்களினை பொறுப்பெடுத்து செயற்படுகின்ற ஆற்றல் எல்லோரிடமும சகயமாக பழகும் திறன் எண்பவற்றினை பெறக்டியதாக இருந்ததாக தெரிவித்தார். (63)

# போத்தல் பெற்றோல்; வடக்கில் வருகிறது தடை

(யாழ்ப்பாணம்)

3வடக்கு மாகாணத்தில் போத்தல்களில் பெற்றோல் விற்பனை செய்வதற்கு விரைவில் தடை விதிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


வடக்கில் போத்தல்களில் பெற்றோல் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்படும் என பெற்றோலிய வளத் திணைக்களத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த டிசில்வா அறிவித்துள்ளார்.

பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை போத்தல்களில் விற்பனை செய்ய முடியாது வடக்கின் பல பகுதிகளில் ஏற்கனவே எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு கிழக்கு இருந்த காலத்தில் ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மட்டுமே இயங்கி வந்ததாகவும் இந்தக் காலப்பகுதியில் போத்தல்களில் எரிபொருள் விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய பிரதேசங்களில் போத்தல்களில் எரிபொருள் விற்பனை செய்யப்டுவதாகவும், எரிபொருளின் விலை அதிகமாகக் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. வடக்கில் மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மத்தியூஸ் சிறப்பாட்டம்; முதல் டெஸ்ட் சமநிலையில்



இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

டுபாயில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் இனிங்சில் இலங்கை 204 ஓட்டங்களையும், பாகிஸ்தான் 383 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

இந்த நிலையில் 142 ஓட்டங்களால் பாகிஸ்தான் முன்னிலையில் இருக்க தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 420 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை அணி சார்பில் அஞ்சலோ மத்தியூஸ் 116 ஓட்டங்களுடனும், பிரசன்ன ஜெயவர்த்தன 48 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

இந்தநிலையில், ஐந்தாவதும் இறுதியுமான நேற்றைய நாளில் தொடர்ந்தும் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி, 480 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை இரண்டாவது இன்னிங்சை இடை நிறுத்திக் கொண்டது.

மத்தியூஸ் 157 பிரசன்ன ஜெயவர்த்தன 63 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்படி 302 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை போட்டிவெற்றி தோல்வியின்றி நிறைவடைவதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டு இனிங்சிலிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் போட்டியின் சிறப்பாட்டக் காரராக தெரிவுசெய்யப் பட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.